CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1952
MADRAS

கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி

மாதப் பத்திரிகை | விலை 4 அணா

தறி 3	கோவை, 15—5—1952.	பாவு 7

சந்தா விகிதம்:

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டும் ஏஜண்டுகளே தேவை.

"கைத்தறி" காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

கூட்டுறவு முறையில் இயங்கும் கைத்தறி நெசவின்
எதிர்காலம்பற்றிய ஓர் திட்டம்

W. ஞானசம்பந்தம், B. A., Cert. A. I. I. B.,
(பிஸினெஸ் மானேஜர், சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.)

நாம் எதிர்பார்த்ததைவிட விரைவில் வியாபாரமந்தம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது. சண்டைக்குப்பின், பலவித கட்டுப்பாடுகளையும் மீறி விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போனதன் காரணமாக அதன்பலாபலனான விலைவீழ்ச்சியை நாம் இன்று காண்கிறோம். திடீரென நேரிட்ட இந்த விலைக்கோளாறானது எல்லாப் பொருள்களையுமே பாதித்துள்ளது. குறிப்பாய், நெசவுத் தொழிலை மிகக் கடுமையாய் இது பாதித்திருக்கிறது. நெசவுத் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலைமையானது, ஆரம்பத்தில் இங்கிலாந்தில் தோன்றி இதர தேசங்களுக்கும் பரவியது. வெளிநாடுகளிலிருந்து நெசவுச் சரக்குகளை இறக்குமதி செய்துவந்த தேசங்கள் யாவும் தங்கள் இறக்குமதிகளை நிறுத்திவிட்டன. ஆனது பற்றி இத்துறையில் முக்கியமாய் ஈடுபட்டிருந்த இங்கிலாந்து, ஜப்பான் தேசங்கள் இரண்டும் தங்கள் உற்பத்தியைக் குறைத்துக் கொண்டு, அதிகரித்துவரும் கையிருப்புச் சரக்குகளை விற்க வழிவகைகள் காணவேண்டி நேரிட்டது. சண்டையின் காரணமாய் ஜப்பான் தேசத்தில் வீழ்ச்சியடைந்த கைத்தொழில்கள், அவை மீண்டும் புதுப்பிக்கப்பட்ட இரண்டே வருஷ கால அளவில், இந்திய நெசவுச் சரக்குகளை முடக்கி வைத்து மார்க்கெட்டுகளைக் கைப்பற்றிவிட்டன என்பது ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

துணி நிலைமையும் நூல் நிலைமையும்

நெசவுத் தொழிலில் ஏற்பட்ட முடக்கமானது பல பிரச்னைகளைக் கிளப்பியுள்ளது. பம்பாய், ஆமதாபாத் நெசவு மில்கள் தங்கள் உற்பத்தியைக் குறைக்க இரவு ஷிப்ட் வேலையை நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்தியுள்ளன. சர்க்கார் சில ஏற்றுமதிகளைத் தளர்த்தியும், மில்கள் தங்கள் நடுத்தர, மோட்டா ரக துணி உற்பத்தியில் பகுதியைத் தாங்களாகவே தங்கள் நாமினிதார்களுக்கு விற்பனை செய்ய அனுமதித்தும் நைஸ், அதிநைஸ் துணிகளின் வினியோகக்கட்டுப்பாட்டை பூராவாக ரத்து செய்தும் உள்ளார்கள். ஆனால் இந்த உதவி பிரயோஜனமானதாயில்லை. இறக்குமதி செய்யும் நாடுகளில் சரக்குகளுக்கு கிராக்கியின்மையாலும், சரக்கு இன்னும் விலையிறங்கட்டும்என்று காத்திருக்கும் பொதுஜனங்களின் மனப்பான்மையாலும் ஏராளமான கைத்தறி ஜவுளிகள் குடோன்களில் தேங்கிக்கிடக்கின்றன.

ஆனதுபற்றி தங்களிடம் சேர்ந்துள்ள தேக்கங்களை வெளிநாடுகளில் போட்டி விலைக்கு விற்க வேண்டி சரக்கு உற்பத்தி செய்யும் மில்கள் அவைகள்மீது விதிக்கப்பட்டுவரும் உற்பத்தி வரி, ஏற்றுமதி வரி இவைகளை ரத்து செய்யும்படி சர்க்காரைக் கோரியுள்ளன. உள்நாட்டு கிராக்கியைப் புறக்கணித்துவிட்டு வெளிநாட்டு கிராக்கியையே பெரிதும் நம்பியிருந்த ஒரு தவறுதலால் இந்த நெசவுத்தொழிலுக்கு வெளி கிராக்கி இல்லாமல் போய் இப்போது உள்நாட்டு வியாபாரத்தை நம்பி வாழவேண்டியேற்பட்டிருக்கிறது.

நூல் நிலைமையை எடுத்துக் கொண்டால், அதுவும் சீர்கேடாயிருக்கிறது. இப்போது நெசவாளிக்கு சரக்கு உற்பத்தி செய்ய எந்தவிதமான நூலும் தேவையில்லை. தம்மிடமுள்ள கையிருப்புச்சரக்கை எவ்வாறு விற்பனைசெய்வது என்பதும் இன்றைய விலை நிலவரத்தில் சரக்கு தயார்செய்து எப்படி முதல் பண்ண முடியும் என்பதுமே நெசவாளியின் பிரச்னையாயிருக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள 40-ம் நெம்பரிலிருந்தும் அதற்கு மேலுள்ள நைஸ், மிக நைஸ் ரக நூலுக்கு இருந்துவந்த வினியோகக் கட்டுப்பாட்டை சர்க்கார் எடுத்துவிட்டார்கள். 40-ம் நெம்பர் வரையுள்ள இந்தியப் பஞ்சால் நூற்கப்பட்ட நூலுக்கு மட்டும் கட்டுப்பாட்டை சர்க்கார் இப்போது நீடித்து வருகின்றனர். ஆனதுபற்றி கைத்தறி நெசவின் எதிர்காலம் இருள் சூழ்ந்த நிலையில் இருந்து வருகிறது. அது மீட்சி பெறுவதானது, மில்களின் உள்நாட்டுப் போட்டியைச் சமாளிப்பதைப் பொறுத்துத்தான் இருக்கும். நம் நாட்டை விட்டு வெளியில் கைத்தறி ஜவுளி ஏற்றுமதி செய்யலாம் என்பதை நாம் எதிர்பார்ப்பது துர்லபமாகும். கைத்தறி நெசவு சரக்கு மாதிரியே மில்கள் சரக்கு தயார்செய்யமுடியாமல் இருக்கும் வகைகளில் தான் கைத்தறி ஜவுளிக்கு ஏதாவது வெளிநாட்டு ஏற்றுமதி கிடைக்கலாம்.

கூட்டுறவு நெசவுத் தொழில்

இன்றைய அடிப்படை அமைப்பின்படி கைத்தறி நெசவுத் தொழிலானது மில்களின் போட்டியை சமாளிக்க முடியாமல் இருந்துவருவது கண்கூடு. இத்தேசத்தின் ஒரு பகுதியினர் கைத்தறி சரக்குகளையே தொடர்ந்து ஆதரித்து வருவதாயிருந்தும் அதன் நிலைமை இவ்வாறு இருப்பதாகிறது. கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டு வரும் நெசவாளிகளும் மேன்மையடைந்தவர்களாயில்லை. ஏனென்றால் கூட்டுறவு முறையில் அமைந்துள்ள இந்தத் தொழிலானது உற்பத்தித் துறையில் தகுந்தபடியான நிலைபெறவில்லை. நம் ராஜ்யத்திலுள்ள 1094 கூட்டுறவு நெசவுச் சங்கங்களில் 2,08,000 கைத்தறிகள் இருந்து வருகின்றன. மேற்படி சங்கங்கள் ஒவ்வொன்றும் சுயேச்சையான ஸ்தாபனங்களாகும். ராஜ்ய நெசவு சங்கத்திலிருந்து நூல் சப்ளையையே அவைகள் பிரதானமாய் எதிர்பார்த்து வருகின்றன. நூலுக்குத் தட்டுப் பாடாய் இருந்த சமயத்தில் அதிகப்படியான நூல் சரக்குக்கு சங்கங்கள் செய்துள்ள கிளர்ச்சியானது ராஜ்ய சங்கத்தின் கவனத்தைக் கவர்வதாயிற்று. அதனைச் சேகரித்து வினியோகிக்கும்பணியில் அது அப்போது முனைந்தது. ஆனால் இப்போது? அதனிடம் தேங்கிக் கிடக்கும் நூல் கட்டுகளுக்கு மார்க்கெட் காணுவதில் கவனம் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது. கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட்டில் கிராக்கியிருக்கும்போது பிரதம நெசவு சங்கங்கள் எல்லாவிதமான சரக்குகளைத் தயார் செய்வதிலும், கூலிகளை உயர்த்தி விலைகளை அதிகரிப்பதிலும் தயங்கவில்லை. உற்பத்தி செய்கிறவர்கள் நலன் கருதி இவைகள் செய்யப்பட்டனவேயல்லாது உபயோகிப்போரைப்பற்றியோ, அல்லது தொழிலின் எதிர்காலம் கருதியோ கருதப்படவில்லை. மார்க்கெட் மந்தமானால் ராஜ்ய சங்கத்திடமிருந்தோ அல்லது சர்க்காராலோ தக்க பரிகாரம் கிடைக்க நம் சங்கங்கள் எதிர்பார்க்கின்றன. தங்கள் சரக்குகளை விற்றுக் கொடுக்கவும், நிவாரண உதவி புரியவும் நாட்டங்கொள்கின்றன.

தேங்கியுள்ள சரக்கை விற்பனை செய்வதென்பது தீராத ஓர் பிரச்னையாகும். நெசவாளிகளுக்கு சர்க்கார் நிவாரணஉதவி புரிவதானது ஒரு உபசாந்தியாகுமேயல்லாது நிரந்தரப் பரிகாரமாகாது. எவ்வளவு சங்கங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு வகையான சரக்கு தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனதுபற்றி, ஒருதிட்ட ரகமான சரக்கு உற்பத்தி செய்வதென்பது அமையாமல்போய், வியாபாரத்துக்கும் தோதுபடாமல், 20-ம் நெம்பர் கட்டுக்குக் கூலி ரூ. 2—4—0 வரை கொடுக்கப்படுவதால், விலைகளும் மாறுபடுகின்றன. ஜில்லாவுக்கு ஜில்லா விலைகளில் வித்தியாசப்படுவதன்னியில் ஒரு ஜில்லாவிலேயே சங்கத்துக்கு சங்கம் மாறுபடுகிறது. பிரதம சங்கங்களைப் பொருத்து ராஜ்ய சங்கத்தின் பொறுப்பானது அவைகளுக்கு நூல் வினியோகம் செய்வது, குறிப்பிட்ட சங்கங்களிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட சரக்குகளைவிற்பனை செய்து கொடுப்பதுபோன்ற நிலையில் இருந்துவருவதாக அமைந்துள்ளது. 1951-ம் வருஷம் இந்த ராஜ்ய நெசவு சங்கங்களின் சரக்கு உற்பத்தியின் மதிப்பு ரூ. 9.2 கோடியாக அதிகரித்ததில் ரூ. 1.5 கோடிக்கும் குறைவான சரக்கைத்தான் மாகாண சங்கம்

தனது எம்போரியங்களில் விற்பனைக்கு ஏற்றது. மீதி சரக்கை அந்தந்த சங்கங்களே நேரடியாக விற்பனை செய்தன.

திட்டமான உற்பத்திமுறை தேவை

இன்றைய மார்க்கெட் மந்தத்தில் தனிப்பட்டமுறையில் வியாபாரம் செய்வதில் பலாபலன் ஏற்படுவதென்பது துர்லபமானது. ஒரு திட்டமான முறையில் கூட்டுறவு அடிப்படையில் கைத்தறி நெசவு சரக்குகளை உற்பத்தி செய்வதுதான் இன்றுள்ள நிலைமைக்கு ஏற்றபரிகாரமாகும். கூட்டுறவு நெசவாளி தனிப்பட செயல் புரிவதால் அதிக பலன் கிட்டாது; இதர நெசவாளிகள் விஷயம் மிகவும் இருள் சூழ்ந்து இருக்கிறது. ஆனதுபற்றி கூட்டுறவுத் துறையில் இயங்கும் தறிகளையாவது ஒரு திட்டவட்டமான உற்பத்திக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவேண்டும். இல்லையேல் இத்துறையில் இருந்துவருவதாக நாம் கூறிவரும் 2,08,000 கைத்தறிகளும் வெறும் புள்ளிக்கணக்காகவே இருந்துவரும். இப்போதைய அடிப்படை நிலையில், இயக்கத்தில் இவ்வளவு அதிகமாக கைத்தறிகள் இருந்தும், சரக்குகளின் தர நிர்ணயமும் அல்லது மொத்த ஆர்டர்களை நிறைவேற்றுதலும் இயலாத காரியமாய் இருந்து வருகிறது. இந்தப் பதினாறு ஆண்டுகளாக ஏற்பட்ட ஒரு நடைமுறையின் பலாபலனை இயக்கத்தின்மூலம் நெசவாளர் நலன் பற்றிய ஒரு பரஸ்பர ஒற்றுமைமனப்பான்மையும், கட்டுப்பாடும், நன்னம்பிக்கையும் நாட்டில் நிலவியுள்ளது. இனி, நமது நெசவாளர் சங்கங்கள் ஆங்காங்கு அவைகள் தனிப்பட்ட முறையில் செயல்படுவது என்பதை பொதுநலன் கருதி விட்டுக் கொடுக்கவேண்டியது அவசியமாகும். அவைகள் ஒவ்வொன்றும் தனித்து நின்று செயல் புரிவது என்பதைக் கருத்தில் கொள்ளாது கூடிச் செயல் புரிதல் அவசியமானது. தனி மரம் தோப்பு ஆகாது.

ஒவ்வொருசங்கமும் அதனதன் சொந்தமான நிர்ணய முறைப்படியோ, அல்லது அந்தந்த பிரதேச அவசியத்தை எண்ணியோ சரக்கு தயார் செய்வதுகூடாது. தாங்கள் தயாரிக்கும் சரக்கை தாங்களாகவே விற்றுவிட சாமர்த்தியம் இருந்தாலும் சங்கங்கள் அவ்வாறு செய்யக்கூடாது. கூலி நிர்ணய விஷயத்திலும் சங்கங்கள் யுக்தானுசாரப்படி செயல் புரியக்கூடாது. மார்க்கெட்டில் செல்வாக்கும் கட்டுப்பாடும் உள்ள ஒரு சுயேச்சையான ஸ்தாபனத்தால் கூலிநிர்ணயிக்கப்படவேண்டும். சரக்குகளை விற்பதிலும் அவைகளுக்கு யாதொருவித பாத்யதையும் இருக்கக்கூடாது. நெய்த சரக்கு முழுவதையும் ஒரு மத்திய ஸ்தாபனத்தினிடம் அவைகள் விற்பனைக்கு ஒப்படைக்கப்படவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, அவைகள் ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மாதிரி நெசவு செண்டர்கள் போல் வேலை செய்துவரவேண்டும். இச்சங்கங்களின் நெசவாளி மெம்பர்களுக்கு மேற்படி ராஜ்ய சங்கத்தின்மூலம் வருஷம் பூராவும் மார்க்கெட் நிலவரத்தையே கவனியாமல், நூல் சப்ளை செய்யப்பட்டு வேலை தரப்படும். ஒரு குறிப்பிட்ட சரக்கு தினுசுகளைத்தான் நெசவு செய்யும் மெம்பர்கள் தயார்செய்யவேண்டும். குறிப்பிட்ட திட்டப்படியே அவர்கள் கூலியும் பெறுவார்கள். இதனால் ஒரேதரமான சரக்குகளை மொத்தமாய்த் தயார்செய்யவும் அவைகளின் நயம் அபிவிருத்தியடையவும் சௌகரியப்படுவதாகிறது.

இப்போது ராஜ்ய நெசவு சங்கம் நடத்திவரும் கூட்டுநெசவு செண்டர்கள் மூலம் சுமார் 3000 தறிகளைக்கொண்டு உற்பத்தியைச் சீராக்கமுடிந்திருக்கிறது. இந்த சரக்குகள் நல்ல திடமானவை என்பதும் விலையும் நியாயமானது என்பதும் மார்க்கெட்டில் கருதப்படுகிறது. மற்ற சங்கங்களின் சரக்குகள் விலை தள்ளி விற்கப்படுகையில் இந்த சரக்குகள் இன்னும் லாபகரமாகவே விற்கப்பட்டுவருகின்றன. ஒரு திட்டமான

(18-ம் பக்கம் பார்க்க,)

புதிய மந்திரி சபைக்கு

(4)

இப்படி நூல் வினியோகத்தை செம்மைப்படுத்தி, தொழில் செய்யப்போதுமான அளவு நூலைக்கொடுத்து, ரகங்களை நிர்ணயித்து, தரத்தையும் உயர்த்தி விட்டால் நிச்சயம் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் பிறக்கும். இதைச் செய்வதற்கான ஒழுங்கான ஸ்தாபன அமைப்புகள் இருந்தால்தான் முடியும் என்பதை நாமுணர்வோம். அப்படிப்பட்ட ஸ்தாபன அமைப்பை உருவாக்கும் கொள்கையை நோக்கி புதிய மந்திரி சபையார் அடியெடுத்து வைக்க வேண்டும் அவ்வளவுதான்.

நாம் இங்கு விவரித்துள்ள இந்த ஆலோசனைகளில் பெரும் பகுதியை ராஜ்ய கைத்தறி கமிட்டியானது தனது 29-4-52 தேதிய கூட்டத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அக்கூட்டத்திற்கு புதிய மந்திரி சபையின் தொழில் மந்திரி ஸ்ரீ கிருஷ்ண ராவ் அவர்கள் தலைமை வகித்துமிருக்கிறார். அவர் அக் கமிட்டியின் சிபார்சுகளை 'கூடுமான வரை' அமுலுக்குக் கொண்டு வரப்போவதாகவும் அறிவித்துமிருக்கிறார். அவரின் அறிவிப்பு, நடைமுறையில் பிரத்யட்ச உண்மைகளைப் பிரதிபலித்துள்ள அச்கமிட்டியின் சிபார்சுகளை நிறைவேற்றி வைப்பதில் செயல்பட வேண்டுமென ராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் சார்பில் வற்புறுத்துகிறோம்.

தொல்லைகள் தவிர்க்கப்படவேண்டும்

கைத்தறி ஜவுளிக்கு இன்று விற்பனைவரி, மொத்த வியாபாரத்திற்கு லைசென்சுக் கட்டணம், வெளிநாட்டு ஏற்றுமதி வரி போன்ற வரி விதிப்புகள் இன்று அமுலில் இருந்து வருகிறது. இது ஒரு அவசியமற்ற ஏற்பாடு என்பதைப் பலதடவைகளில் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

இவைகளினால் துணியின் விலை வெளிநாடுகளில் கூடிவிடுவதால் மற்ற நாட்டு ஜவுளிகளோடு போட்டியிட்டு விற்கமுடியாமல் போய்விடுகிறது என்கின்ற உண்மையைப் பலதடவைகளில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரால் எடுத்துக்காட்டப்பட்டு வந்திருக்கிறது. இருந்தும் எக்காரணத்தாலோ விடாப்பிடியாக இவ் வரி விதிப்புகள் தொடர்ந்து நீடித்து

எம். கே. சாமி.

இருந்து கொண்டே வருகிறது. எனவே, கைத்தறிஜவுளி வர்த்தகம் சம்பந்தப்பட்டமட்டில் மேற்கண்ட வரி விதிப்புகள் பூரணமாக நீக்கப்பட புதிய மந்திரி சபையார் முயற்சிக்கவேண்டும்.

விற்பனை வரி, மொத்த வியாபார லைசென்சுக் கட்டணம் போன்றவைகளை மாகாண சர்க்காரால் நீக்கமுடியும். அதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. அதேகாலத்தில் ஏற்றுமதி வர்த்தகத்திற்கு வரி விதிப்பதை விலக்கவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு நம் ராஜ்ய சர்க்கார் சிபார்சு செய்யவும் முடியும். இதைச்செய்ய புதிய மந்திரிசபையார் தயங்கக்கூடாது என்றும் எடுத்துக்காட்டுகிறோம்.

ஸ்தாபன அமைப்பு

நெசவாளர்கள் மத்தியில் ஒரே மாதிரியான தரமுள்ள துணிகளைத் தயார்செய்து பெறுவதற்கு இன்று ஏற்றதொரு ஸ்தாபன அமைப்பாக இருப்பதெல்லாம் கூட்டுறவு இயக்கம்தான் என்பது தெளிவு. ஆனால் இவைகள் போதுமான அளவு ராஜ்யமெங்கும் அமைக்கப்படாததாலும், அவ்வகையில் கடந்த காலங்களில் அரசாங்கத்தார் பூர்ணமான முயற்சி எடுத்துக்கொள்ளாததாலும் இவ்வியக்கம் வளரமுடியாமல் இருந்துவிட்டது.

பல இடங்களில் நடைபெற்ற இடைவிடாக் கிளர்ச்சிகளாலும், தீவிரமான முயற்சிகளாலுமே தான் கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் சில புதிய கூட்டுறவு சொஸைட்டிகள் அமைக்கப்பட்டன. யதார்த்தத்தில் பல இடங்களில் நெசவாளர்களாகவே முன்வந்து தங்களுக்கு கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துத் தரவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியபோதெல்லாம் சில சமயங்களில் மறுக்கப்பட்டிருக்கின்றன. அர்த்தமற்ற மறுப்புகளால் அவ்வியக்கம் பாமர மக்கள் மத்தியில் பரவ முடியாமல் செய்யப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் அனுபவ உண்மையாகும்.

எனவே, புதிய மந்திரி சபையார் ராஜ்யத்திலுள்ள நெசவாளர்களுக்கு நிரந்தரமான தொழில் பாதுகாப்பு அளிக்கவேண்டுமானால், அதற்காக கஞ்சித்தொட்டிகள் ஏற்படுத்துவதில் பயனில்லையென்பதை உணர்ந்து, அவர்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கம்

வளர நடவடிக்கை யெடுத்துக் கொள்வதுதான் சாலச் சிறந்ததாகும். அப்பொழுதுதான் திட்டமான நன்மைகளை ஸ்தாபனரீதியாகச் சர்க்காரால் செய்ய முடியும்.

நெசவாளர்களைப் பூராவும் கூட்டுறவு இயக்கத்தினுள் கொண்டு வருவதால் பல உற்பத்தியாளர்கள் (மாஸ்டர் வீவர்கள்) பாதிக்கப்படுவார்களே என சிலர் வாதிக்கலாம். அதற்காக அவர்கள் தங்களின் "சுதந்திரமான தொழில் உரிமை" பறிக்கப்படுவதாகக் கூடக்கிளர்ச்சி செய்யலாம். அல்லது ஜீவாதார அடிப்படை வர்த்தக உரிமைநசுக்கப்படுவதாகவும், எனவே, அதிலிருந்து தங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்றும் உயர்நீதி மன்றங்களில் வழக்குகளும் போடலாம். இவைகள் யாவும் நடைபெறலாமென்று எதிர்பார்த்தே தான்—இவ்வளவு விதமான எதிர்ப்புகளையும் சமாளித்தேதான் நெசவாளர்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கம் வளர வேண்டுமென்று நாம் கூறுகிறோம். அப்படித்தான் வளரும்.

இதை நாம் சொல்லும்போது ஏதோ ஒருபக்கம் சேர்ந்து பேசுவதாக கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் எண்ணலாம். அது இயற்கையும்கூட.

ஆனால், நாம் பரம்பரை பரம்பரையாக கைத்தறி ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளோருக்கு (மாஸ்டர் வீவர்களுக்கு) இவ்வியக்கத்தை வளர்ப்பதன் மூலம் அவர்களை வர்த்தகத்துறையிலிருந்தே ஓட்டிவிட வேண்டுமென்று கூறுவதாக அர்த்தம் செய்துகொள்ளக் கூடாதென கேட்டுக்கொள்கிறோம்.

உத்தேச கூட்டுறவு இயக்கத்தில் அவர்களுக்கும் பங்கு அளித்து, அவர்களின் வர்த்தக. தொழில் திறமைகளைப் பூரணமாக உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டுமென்றே நாம் ஆசைப் படுகிறோம். அவர்களின் சுதந்திரமான வர்த்தகம் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் தொடர்ந்து நடைபெற அவர்களுக்குத் தேவையான எல்லா ரகங்களையும் இவ்வித ஸ்தாபனங்களின்மூலம் உற்பத்தியாவதிலிருந்து கொடுத்து அவர்களையும் பாதுகாக்க கண்டிப்பாக முடியும் என்றே கருதுகிறோம்.

அதுமட்டுமின்றி, முன்னைக் காட்டிலும் நல்ல தரமுள்ளரகங்களை அவர்கள் தங்களின் வாடிக்கையாளர்களுக்கு விற்று நல்ல லாபத்தையும், பெயரையும் தேடிக்கொள்ள முடியுமென்றும் நாம் எடுத்துக் காட்டுகிறோம். ஆகையால் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் மத்தியில் கூட்டுறவுஇயக்கம் வளருவதைக் கண்டு பீதியடைய வேண்டிய அவசியமில்லை என உறுதி கூறுகிறோம்.

நிரந்தரமான ஆலோசனை சபைகள்

கைத்தறி நெசவுத் தொழில், வர்த்தகம், தொழிலாளர்கள் சம்பந்தமாக அவ்வப்போது எழும் பிரச்னைகளைப் பரிசீலிக்கவும், பரிகாரம் காணவும் சர்க்காருக்கு ஆலோசனை கூற நிரந்தரமான "ஆலோசனை போர்டு" ஒன்று அமைக்கப்பட வேண்டுவது மிகவும் அவசியமாகும். அந்த போர்டு, கூறக்கூடிய ஆலோசனைகள் தாமதமின்றி அமுலுக்குக் கொண்டுவரப்படவும் வேண்டும் என்பதை இங்கு நாம் நினைவு படுத்துகிறோம்.

இன்றுகூட சென்னை ராஜ்ய கைத்தறிக் சமிட்டி யென்றொரு ஸ்தாபன அமைப்பை சர்க்கார் ஏற்படுத்தித் தானிருக்கிறார்கள். அந்த ஸ்தாபனத்தில் சிலர் நெசவாளர்களின் துரோகிகளும், கூட்டுறவு இயக்க விரோதிகளும் அங்கம் வகிக்கிறார்கள். என்றாலும் நிலைமையின் நிர்ப்பந்தம் அவர்களைப் பலசமயங்களில் சிறந்த ஆலோசனைகளைக் கொடுக்கச் செய்கிறது. ஆனால் அவ்வாலோசனைகள் மட்டும் அமுலுக்கு வருவதில்லை. இதுபோன்ற பொம்மைஸ்தாபன அமைப்புகளையோ கண்துடைப்பு ஏற்பாடுகளையோ நாம் நிச்சயம் வெறுக்கிறோம்.

எனவே, இன்றுள்ள ராஜ்ய கைத்தறி கமிட்டியின் சிபார்சுகளை அமுலுக்கு சர்க்கார்

வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!

கூட்டுயர்வே நாட்டுயர்வு! கூட்டுறவு கைத்தொழிலை ஆதரியுங்கள்!

Q. 268, ஆண்டாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், ஸ்ரீவில்லிபுத்தூர் P. O.

எங்களிடம் $20^s \times 26^s$ நூலில் தயாரித்த 30" x 16 கெஜம். 50" x 12 கெஜம் காடாபீஸ்களும் $36^s \times 40^s$ நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும் 50" x 12கெஜம் காடா பீஸ்களும் தயாராகின்றன. விலை சகாயமாகவும், கெட்டியான சரக்காகவும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! **முன் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்**

S. ராமசாமி, தலைவர்.

கொண்டுவரவேண்டுவதோடு, இதைக்காட்டிலும் சிறந்த அதிகாரம் நிறைந்த வேறு ஓர் ஆலோசனை போர்டை — நெசவாளர்களின் உண்மைப் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம்.

இதே போன்று ஒவ்வொரு ஜில்லாவிலும், ஜில்லா கைத்தறி ஆலோசனைபோர்டுகளும் அமைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் ஸ்தலப் பிரச்னைகளிலிருந்து, பொதுவாக ராஜ்யப் பிரச்னைகள் (நெசவுத்தொழில் சம்பந்தப்பட்ட) வரை முறையாகக் கவனித்துக் காரியங்களை ஒழுங்காகச் செய்ய முடியும். இதை ராஜ்ய சர்க்கார் செய்ய முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

விசைத்தறிகள்!

துணி உற்பத்தி பெருகவும், அடக்க விலை குறையவும், மில் துணியோடு போட்டி போடவும் கைத்தறி நெசவாளர்களின் மத்தியில் விசைத்தறிகளைப் படிப்படியாகப் புகுத்த வேண்டுமெனப் பலர் சர்க்காருக்குக் கூறிவரும் ஆலோசனையை நாம் 'இன்றுள்ள நிலையில்' எதிர்க்கிறோம். இந்த ஆலோசனையில் முற்போக்கான எண்ணம் இடம் பெற்றிருக்கிறது என்றாலும், நடைமுறையில் இது சாத்தியமா என்பதை ஆலோசிக்கும்போதுதான் இவ்வாலோசனையை நாம் குறை கூறுகிறோம்.

இன்றுள்ள கைத்தறிகளின் தொழில் தேவைக்குப் போதுமான நூலையே சப்ளைசெய்யமுடியாமலிருக்கும்போது விசைத்தறிகளுக்குப் போதுமான நூலை எப்படிப் பெற முடியுமென இவ்வாலோசனை கூறுபவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை. இந்த ஆலோசனையை மில் முதலாளிகள் கூறுவதில் சூது இருக்கிறது. ஆனால் இதை ஒரு கைத்தறி நெசவாளர் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் பொறுப்பான தலைவர்களும் அப்படியே கூறுகின்றார்கள் என்னும்போதுதான் உண்மையிலேயே நாம் ஆச்சரியப்படுகிறோம்; எதிர்க்கிறோம்.

கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் விசைத்தறிகளைப் புகுத்தித்தான் மில் துணியோடு போட்டி போட முடியும் என்று எண்ணுகிற பேதமையை நாம் எப்பொழுதுமே ஏற்றுக்கொள்ளுவதில்லை. இன்றுள்ள கைத்தறிகளைக் கொண்டே மில் துணியோடு போட்டியிட முடியும் என்ற அனுபவ உண்மையில் அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு என்றுமே உண்டு. ஆகையால் புதிய மந்திரி சபையார் அவசரப்பட்டு இதுபோன்ற நடவடிக்கைகளை ஏதாவது மேற்கொண்டுவிடவேண்டாமெனவும் நாம் கோருகிறோம்.

தொழிலை மத்திபப்படுத்தவும்.

கைத்தறித் துணியின் அடக்க விலை குறையவும, உற்பத்திச் செலவு குறைக்கப்படவும் தொழிலை மத்திபப்படுத்துவதுதான்சிறந்ததாக இருக்கமுடியும். அதாவது 20, 30 தறிகளைக்கொண்ட பாக்டரி முறையில் இன்றுள்ள கைத்தறிகளையேகொண்டு இயக்குவித்தால் நிச்சயம் துணியின் அடக்க விலையைக் குறைக்கலாம்.

இன்றைய அமைப்பில் கைத்தறிகள் சிந்திச்சிதறி கிடக்கின்றன. ஒவ்வொரு தறிக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு இடம் (குடியிருப்போடு சேர்த்து) இரண்டு ஆள்; இல்லையெனில் குடும்பமே முழுவதும் சேர்ந்து உழைக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பதில் குறிப்பிட்ட இடத்தில் தொகையாக 30, 40 தறிகள் இருந்தது என்றால் நெய்பவர்களுக்கு அனுசரணையாக கைவேலைக்கு மிகக்குறைந்த அளவு ஆட்கள் இருந்தால் பாவு வீசுவது, பசைபோடுதல், தார்சுற்றுதல்போன்றவைகளுக்குப் போதுமானது.

இப்படி உற்பத்திச் சாதனத்தை மத்திபப்படுத்துவதால்நெசவாளியின் குடும்பப் பெண்கள் வேறு தொழில்களுக்குச் சென்று உழைத்துவருவாய் தேடமுடியும். நெசவாளிக்கு குடும்ப பாரமும் குறையும்.

எனவே, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் புதியமந்திரி சபையார் நம் ஆலோசனைகளைப் பரிசீலிக்க வேண்டுகிறோம். இந்த அடிப்படையில்பிரச்னைகளை அணுகிப் பரிகாரம் காணவும் வேண்டும் என்று வற்புறுத்தவும் செய்கிறோம்.

இந்த ஆலோசனைகள் திட்டமிட்டு அமுல் நடத்தப்படுவதில்தான் நெசவாளர்களின் வாழ்வும், தொழிலின் எதிர்காலமும் பின்னிப்பிணைந்திருக்கிறது என்கின்ற அசைக்க முடியாத உண்மையை ஒப்புக்கொள்வோர் நிச்சயம் இதற்கான வழிமுறைகளில் சர்க்காரைச் செயல் படும்படி தூண்டுவர் என நாம் நம்புகிறோம்.

தொழிலுக்குப் போதுமான நூலைக் குறைந்த விலையில் கொடுத்து, ரகத்தை நிர்ணயம் செய்து, தரங்களையும் ஒழுங்குபடுத்தி, வெளிநாட்டு, உள்நாட்டுவர்த்தக அபிவிருத்திக்குத் திட்டமிட்டு காரியத்தில்இறங்க சர்க்கார் முன்வந்துவிட்டால் கைத்தறி நெசவாளர்களின் கவலையை, வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோரின் துயரைக் கண்டிப்பாகத் தீர்த்துவிட முடியும். இதைச் செய்வதில்காலதாமதம் காட்டாது காரியத்தில் இறங்க அனைவரும் புதிய மந்திரி சபையை வற்புறுத்துவோமாக.

கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க

மத்திய, மாகாண சர்க்கார்களுக்கு கோவை கை. நெ. தொ. சங்க உபதலைவர் ஸ்ரீ பி. ஏ. ராமசாமியின் வேண்டுகோள்.

சென்னை ராஜ்யத்தில் 8 லட்சம் கைத்தறிகள் இருப்பதாகத் தெரிகிறது. தற்கால நெருக்கடியைப்போக்கவும், கைத்தறி நெசவாளர்களின் வருமானத்தை நிரந்தரமாக்கவும், அவர்களின் வாழ்க்கையை சீர்படுத்தவும், கீழ்க்கண்ட யோசனைகளை உடனடியாக நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ராஜ்யத்தில் உள்ள 8 லட்சம் தறிகளையும் கூட்டுறவு சங்கத்தில் கொண்டு வரும்படி பலர் அபிப்ராயம் சொல்லிவருகிறார்கள். 8 லட்சம் தறிகளையும், ஒரே தடவையில் கூட்டுறவு சங்கத்தில் சேர்ப்பதென்பது நடைமுறையில் சாத்தியமாகாது. ஏனெனில் 8 லட்சம் தறிகளை கூட்டுறவு முறையில் சேர்த்து அதற்கு சர்க்கார் பங்கீடு மூலதனமும், கொள்முதல் முதலீடுமாக சுமார் அதற்கு தறி 1-க்கு ரூ. 150/- வீதம் 8 லக்ஷம் தறிகளுக்கு 12 கோடி ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கும்.

தறி 1-க்கு ரூ. 150—0—0 கொடுத்தால்தான் ஒரு தறி மாதம் பூராவும் வேலைசெய்ய 3 பாவுகள் (அதாவது 90 கெஜம்) 100, 80. 60, நெம்பரில் கொடுக்கமுடியும். 10, 20, 30, 40 நெம்பரில் ஆறு பாவுகள் (அதாவது 180 கெஜம்) கொடுக்கமுடியும்.

மேற்கண்ட வகையில் கொடுக்காவிட்டால் குடும்பத்தை நடத்தமுடியாது. 12 கோடி மூலதனம் கொடுத்துவிடலாம். 12 கோடி ரூபாயில் தயாரிக்கும் கைத்தறித் துணியை மார்க்கெட்டில் மில் துணியோடு போட்டியிட்டு விற்க முடியாத நிலை ஏற்படும். அப்பொழுது தற்போதைய கூட்டுறவு சங்கங்களில் சரக்கு தேங்கி, மேற்கொண்டு தறிக்காரர்களுக்கு வேலை கொடுக்கமுடியாதநிலைஏற்பட்டிருப்பதுபோல் ஏற்பட்டுவிடும்.

ஆதலால் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் 8 லக்ஷம் தறிகளைப் பார்க்கும்போது 8 லக்ஷம் குடும்பங்களாக இருக்காது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 2 தறிகள் முதல் 10 தறிகள் வரை வைத்திருப்பதும் உண்டு. அக்குடும்பத்தின் வாழ்க்கைச்சிலவை அனுசரித்து தறிகளைகுறைத்துக் கொள்ளவும் செய்யலாம், அப்படிப் பார்க்கும்போது 4 லக்ஷம் தறிகளை ஆரம்ப காலத்தில் சேர்த்துக்கொள்ளலாம். இதற்கு மூலதனம் சுமார் 4 கோடியே 50 லக்ஷம் வேண்டியிருக்கும் தொழிலை ஆரம்பித்ததும் நெசவாளர் பெறும் கூலியில் ரூபாயிக்கு 0–1–0 வீதம் பங்கு மூலதனத்தை 3 வருடங்களில் வசூலித்துக் கொள்ளலாம். அதையும் மூலதனத்திற்காக உபயோகப்படுத்தலாம். ஆரம்பகாலத்தில் கொடுக்கப்படும், 4 கோடியே 50 லக்ஷம் ரூபாயில் மத்திய சர்க்கார் 1 கோடியே 50 லக்ஷமும், ராஜ்ய சர்க்கார் 1 கோடியே 50 லக்ஷமும் மானியமாக ஒதுக்கிவிட்டு 1 கோடியே 50 லக்ஷத்தை கடனாகப் பாவித்து 10 வருடங்களில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்தத் தொகையை அந்த பிர்க்காவிலுள்ள சங்கங்களுக்கு ஒதுக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிதிக் கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விநியோகிக்கலாம். இத்துடன் வருடா வருடம், நூல் விலை குறைப்பிற்காக மத்திய சர்க்காரும், ராஜ்யசர்க்காருமாகச்சேர்ந்து 2 கோடி மானியம்அளித்துவரவேண்டும்.

காரணம், மில் துணியோடு போட்டியிட முடியாமல் திட்டம் தோல்வி அடைந்துவிடுமென்ற பயம் இருந்து வருவது யாவரும் அறிந்ததே. மேலும் வேஷ்டி, சேலை ரகங்களை கைத்தறிகளுக்கு 75% சதவிகிதமும், மில்களுக்கு 25% சதவிகிதமுமாக ஒதுக்க வேண்டும். சர்க்கார் உபயோகிக்கும் துணிகளில் கைத்தறி துணிகளுக்குத்தான் முதல் சலுகை அளிக்கவேண்டும். இத்திட்டத்தால் தனிப்பட்டவர்களின் வியாபாரம் பாதிக்கலாம். அதற்கு அவர்கள், இக்கூட்டுறவு சங்கத்தில் தங்களால் ஆன தொகையை டிபாஸிட் கட்டினால் அவர்களுக்குக் குறைந்த பட்ச லாப வரம்பை அடிப்படையாகக்கொண்டு சரக்கைக் கொடுப்பதுடன் அவர்கள் கட்டியுள்ள தொகைக்கு குறைந்த பட்ச வட்டியும் கொடுக்கப்பட்டு, வியாபாரத்தை விருத்தி செய்ய அவர்களின் தொழில் நுணுக்க உதவியைப் பெறுவதுடன் அவர்களும்தொழில்நடத்த உதவிசெய்யலாம். இதில்சில்லரை வியாபாரிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் மொத்த வியாபாரிகளுக்கும், இவர்களுக்கும், லாப வரம்பை மட்டும் மாற்றியமைக்கப்படவேண்டும். தற்கால கூட்டுறவு திட்டத்தில் தனிப்பட்டவர்கள் பங்குதாரர்களாக சேரக்கூடாது என்ற விதியிருப்பதாக அறிகிறோம். தற்கால நிதிக் கஷ்டங்களைப் போக்க அவர்களையும் சேர்த்துக்கொண்டு, மூன்று அங்கத்தினர் ஸ்தானங்களையும் ஒதுக்கலாமென்று கருதுகிறேன்.

தறிக்காரர் பங்குகள் முழுவதையும் சர்க்காரே முதலில் கொடுக்கவேண்டுமென்பதில்லை, சௌகரியமுள்ள ஒருசில தறிக்காரர்களிடமும்முழுத்தொகையோ அல்லது பாதித்தொகையோ, வசூலித்துக்கொள்ளலாம். இத்திட்டங்களை உடனடியாக நிறைவேற்றும்படி ராஜ்ய, மத்திய சர்க்கார்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், கைத்தறிஜவுளி வர்த்தகத்தைப்பொறுத்தமட்டில் நமது ஸ்தானீகர்களைக்கொண்டு வெளிநாட்டு வியாபாரத்தையும் பிடிக்கவேண்டும்.

எப்படி வாழ்வோம்?

ஈ. கு. விவேகானந்தன்.

"எப்படி வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. இனி எப்படி வாழ்வோம் என்பதே முக்கியம்" இது ஒரு ஆங்கில அறிஞரின் வாக்கு. இந்த வாக்கு நம் கைத்தறி ஜவுளி வியாபாரத்திற்குபல வழிகளில் பயன்படும். "இதுவரை நாம் எப்படி வியாபாரம் செய்தோம் என்பது முக்கியமல்ல. இனி எப்படி வியாபாரம் செய்யவேண்டும் என்பதே மிக முக்கியம். இதுவரை எப்படி லாபம் சம்பாதித்தோம் என்பது முக்கியமல்ல. இனி எப்படி லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதே மிக முக்கியம். இதுவரை எப்படி நஷ்டமடைந்தோம் என்பது முக்கியமல்ல. இனி எப்படி நஷ்டமடையாமலிருக்கவேண்டும் என்பதே மிக முககியம். இதுவரை சர்க்காருக்கு எப்படி வரி கட்டினோம் என்பது முக்கியமல்ல. இனி எப்படி சர்க்காருக்கு வரி கட்டவேண்டும் என்பதேமிக முக்கியம்." இந்த மாதிரி அந்த ஆங்கில அறிஞரின் வாக்கை அடிப்படையாகவைத்துக்கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் எழுதலாம்.

உழைப்புக்குக் காலம் சாதகமாக இருந்தது ஒரு சமயம். ஆனால் தற்போது அப்படியில்லை. உடல் அசையாமல் உட்கார்ந்துகொண்டு உத்திரவிடுபவர்கள் உல்லாசமாக வாழ்கிறார்கள். கைவிரலாட்டி களிப்புடன் காலங்கடத்துகிறார்கள். நமது கைத்தறி துணி வாத்தகத்திலே பெரும் உழைப்பு இருக்கிறது. ஆனால் ஊதியத்தைத்தான் காணோம். கண்பிதுங்கப் பாடுபடுகிறோம். காசு வரமாட்டேன் என்கிறது. வருடாந்திர ஆதாயத்தை ருசி பார்ப்பதற்கு வருமானவரி ஆபீஸ் ஆணையிட்டு அழைக்கிறது. ஒட்டிய வயிறு உள்ள தொழிலாளி தனக்கு அதிக சம்பளமோ, போனஸோ கிடைக்குமா என்று முதலாளியின் முகத்தைப் பார்க்கிறான். அல்லது ஆதாயமில்லாததால் முதலாளி தன்னை எங்கே நிறுத்திவிடுகிறாரோ என்று ஏக்கத்துடன் பார்க்கிறான். விநாயகபகவானுக்கு தேங்சாய் உடைக்கிறான். இவ்வளவுக்கும் காரணம் வியாபாரத்தில் அடிக்கடி "டல்" லுக்கு முகூர்த்தக்கால் நடப்படுவதால்தான்.

வர்த்தகம் வயோதிகப் பருவத்தை அடைந்துவிட்டது. வியாபாரம் விதவைத் தன்மையை அடைந்து விட்டது. அதோடு விலையிறக்கம் என்ற காலரா வியாதி வியாபாரத்தை மரணப் படுக்கையில் படுக்கச்செய்துவிட்டது. இதில் சர்க்கார் வேறு வியாபாரத்திற்கு சாவுமணி அடிக்கிறார்கள். இதனால் விலை இறக்கம் என்ற நிச்சய தாம்பூலம் வழங்கப்படுகிறது. வியாபாரிகள் பயந்து கைவசமுள்ள சரக்குகளை விலை தள்ளி விற்கின்றனர்.

வியாபாரிகள் என்பது தின்பண்டமல்ல; இஷ்டப்பட்டவரெல்லாம் கடித்து ருசி பார்ப்பதற்கு. டல் என்ற காமுகன் வியாபாரம் என்ற மங்கையை அடிக்கடி கற்பழிக்கிறான். இதனால் பலாத்கார முறையில் கர்ப்பம் ஏற்பட்டு இறுதியில் நஷ்டம் என்ற குழந்தையையே வியாபாரம் பிரசவிக்கிறது. அந்த நஷ்டம் என்ற குழந்தையின் சகல பொறுப்பும் வியாபாரிகளையே சேர்கிறது. அதோடு வியாபாரிகளை விட்டதா சனியன்! ஒவ்வொரு வியாபாரிக்கும் முதலீடு இல்லாத இரண்டு கூட்டாளிகள் உண்டு. லாபம் வந்தாலும் வராவிட்டாலும் இவர்கள் கேட்கும் பங்கை நாம் கொடுத்துத் தொலைக்கவேண்டும். நமக்கு எப்படி நஷ்டம் வந்தது என்பது இவர்களின் விசாரணையல்ல. ஏன் லாபம் வரவில்லை என்பதே இவர்களின் அதிகாரத் தொனி! விலைகள் இறங்கிய காலங்களில் நாம் கொடுத்த நஷ்டங்களைப் பற்றி இவர்களுக்கு கவலையில்லை. விலைகள் ஏறி விற்றதைப்பற்றித்தான் அவர்களுக்கு உரிமை. நமது பணத்தை அவர்களின் ஜேப்பில் உள்ள பணமாக உரிமை கொண்டாடுகிறார்கள். நாம் எப்படி வரி கட்டாமலிருக்க வியாபாரத்தைச் செய்வது என்று சிந்தனையில் அமர்ந்திருக்கும்போது சர்க்கார் என்ன செய்கிறாகள் தெரியுமா? மேலும் வியாபாரத்திற்கு அதிக வரி எப்படிப் போடுவது என்ற சதுரங்கக் கட்டத்தை விரிவாக்குகிறார்கள். எனவே நாம் **எப்படி வாழ்வோம்** என்ற சோர்ந்த கவலைத் தன்மையை அடைகிறோம். இவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாக கைத்தறி ஜவுளி வெளிநாட்டு ஏற்றுமதிக்கு அனுமதி கொடுங்கள் என்று அரசாங்கத்தைக்கேட்டால் வெறுப்புடன் பதில் சொடுக்கிறார்கள். வியாபாரிகள் அகதிகளாக வேண்டும் என்பது அரசாங்கத்தின் ஆவல் போலிருக்கிறது!

இதனால் நாம் சோர்ந்து உட்கார்ந்துவிடக்கூடாது. எப்படி வாழ்வோம் என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் காசு வராது! படுத்துக்கொண்டிருந்தால் பணம் வராது! துயரப்பட்டு கொண்டிருந்தால் துட்டுவராது! ஒரு புரட்சியை ஏற்படுத்துவோம்! அதுதான் நமது அயராத உழைப்பு! திரைகடலோடியும் திரவியம் தேடுவோமாக! வாழ்க வியாபாரக்கலை!

ஏஜனடுகள் தேவை

குடிசைத்தொழில்

மா. மாரிமுத்து, B. A., B. Com.

கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு போன்றவை; கிராமியப் பொருளாதாரத்தை உயிரோட்டமாக உடையது நம் மக்களின் வாழ்வமைப்பு. தற்பொழுது நம் நாட்டுப் பொருளாதாரம் வளம்பெற வேண்டுமாயின் ஆக்கப்பொருளின் உற்பத்தி பன்மடங்கு பெருகியாக வேண்டும். 'உற்பத்தி செய்க அல்லது அழிக', என்ற அறைகூவலை நாட்டில் பரப்பினார் முதன் மந்திரி நேரு. இதை நிறைவேற்ற தொழிற்சாலைகளின் ஆக்கப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; என்றாலும் குடிசைத் தொழிலை முழுதும் அழித்துவிட வேண்டுமென்பது அர்த்தமல்ல; சிதைத்துவிடவும் முடியாது! ஏன்?

கிராமியப் பொருளாதாரகேந்திரத்தின் முக்கியஸ்தர்களான விவசாயிகளின்பயிரிடும்தொழில், பருவமழையின்சூதாட்டமாக இருக்கிறது! ஓராண்டில் நான்குமாதங்களுக்குமேல் விவசாயத் தொழிலின்றி வீணே கழிக்கின்றனர்; ஒழிந்த நேரங்களிலும் விவசாயிகள் குடிசைத் தொழிலில் ஈடுபட வாய்ப்பு அமைகிறது. மின்சார விநியோகம் கிராமங்களுக்குள் புகுந்ததும், குடிசைத் தொழில்கள் புது வேகத்தோடு மிளிர ஆரம்பித்தன. குடிசைத் தொழில்கள் நம் நாட்டுப் பொருளாதாரத்தின் தனக்கென ஒரு பாதுகாப்பான இடத்தை வகுத்துக்கொண்டது. எல்லாத்துறையிலும் முன்வரிசையில் அணிவகுக்கும் எந்தநாடும் சில குறிப்பிட்ட நவநாகரீக அழகுச் சாதனங்களையும், வேலைப்பாடு மிக்க வாழ்க்கைச் சாதனங்களையும் குடிசைத் தொழிலுற்பத்தியிடமே கையேந்திப் பெறவேண்டியிருக்கிறது. அப்பொருள்களை பெரிய அளவில் பல ரகமாக தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடிவதில்லை! புது முயற்சியாக எத்தொழிலைத் தொடங்குவதற்கு முன்னும் அதைச் சிறு அளவில் குடிசைத் தொழிலில் புகுத்தி அதன் தொழிலியல் நுணுக்கத்தைக் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

ஸ்ரீ மினுமசானி கருதுவதுபோல 'ஜனச் செல்வம்' படைத்தது நம் நாடு! நாட்டில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைத்து நம் மக்களின் வருவாயை உயர்த்த வேண்டுமாயின் பெரும் தொழிற்சாலைகளோடு குடிசைத் தொழில்களையும் தற்காலத்திற்கேற்ப பலனுள்ளவற்றைப் புதுப்பித்து, புத்துணர்ச்சி ஊட்டி, வலிவடையச் செய்ய வேண்டும். ஜப்பான், மக்கள் சைனா ஆகிய நாடுகளின் பொருளாதாரக் கட்டுக்கோப்பை பலப்படுத்துவதில் குடிசைச் தொழில்கள் கொண்டுள்ள பங்கு உலக நாடுகளைப் பிரமிக்கச்செய்து வருகிறது!

நம் நாட்டின் இன்றைய சூழ்நிலையில் தொழிலியல் விரிவில் குடிசைத் தொழிலின் வளர்ச்சியும், சிறு தொழில்களின் பெருக்கமும் குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்குமென அறிஞர்கள்கருதுகிறார்கள். நம் நாட்டிலேற்பட்ட தொழிலியல் மாறுதலின்போது, நம நாட்டின் பழம் பெருமை வாய்ந்த தொழில்களை அப்போதிருந்த அரசாங்கம் ஆதரிக்கத் தவறியதாலும், பாதுகாக்கத் தவறியதாலும் நம் நாட்டின் பரம்பரைச்சொத்தான பல சிறு கைத்தொழில்களும் சிதைந்து மறைந்தன. நம் நாட்டின் பொருளாதாரம் முறையாக வளர்ச்சி பெருகுவதற்கு சிறு தொழில்களும், குடிசைத் தொழிலும் முக்கியமாக தேவைப்படுவதோடு, அத் தொழில்கள் அனைத்தும் முறையாக இணைக்கப்படவும் வேண்டும்.

நம் நாட்டில் நிலவிவரும் இன்றையப் பொருளாதாரசூழ் நிலையில் ஆக்கப்பொருள்களின் உச்ச நிலை உற்பத்திக்கும், 'எல்லோருக்கும் வேலை' கொடுப்பதற்கும், நாட்டின் வளத்தில் நாட்டுக் குடிமக்கள் எல்லோரும் சம பங்கு பெறவும் ஆக்கப் பொருள் உற்பத்தி பெருகவேண்டும். பெரும் தொழிற்சாலைகளின்றி உற்பத்திப் பெருக்கம் உச்சநிலை யடைய முடியாதுதான்; எனினும் முன்னேறிக்கொண்டிருக்கும் நவீன தொழிற்சாலைகள் நம் நாட்டில் பெருகிக்கொண்டிருக்கும் ஜனத்தொகைக்கு முழுநேர வேலை தர இயலாது. ஆகவே குடிசைத் தொழில்களையும் வளர்க்கவேண்டியிருக்கிறது.

பிறர் உழைப்பைப் பணமாக்கிக் கொடுக்கும் பொருளாதாரச் சுரண்டலைக் குறைத்து, நாட்டுச் செல்வத்தை குடிமக்கள் எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்து, கிராமீயச்சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவும் தக்க வாய்ப்பளிப்பது குடிசைத் தொழிலாகும். பெரும் தொழிற்சாலைகளோ சுரண்டலுக்கு ஆக்கமளித்து, செல்வம் சிலரிடமே குவிய வழி வகுக்கிறது.

ருஷியா, சைனாபோன்ற நாடுகளின் போர்க்கால அனுபவம் உலக நாடுகளுக்கு நல்லதொரு பாடம் கற்பித்திருக்கிறது. சில குறிப்பிட்ட இடங்களில் ஒரே முகமாக பெரும் தொழிற்சாலைகளைப் பெருக்குவதைக்காட்டிலும் பரவலாக சிறுசிறு தொழில்களை வளர விடுத்தால் போர்க்காலங்களில் எதிரிகளின் தாக்குதலின் போது பாதுகாப்பு இடங்களுக்கு அவற்றைச் சேதமின்றி சுலபமாக உடனடியாக மாற்றிவிட முடிகிறது. சிறு குடிசைத்தொழில்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி, தொழில்களை கூட்டுறவு சங்கங்களாக இணைத்து பலப்படுத்தி, நாட்டுப் பெருந் தொழிற்சாலைகளோடு இணைத்து விட்டு தன் ஆக்கப்பொருள் உற்பத்தியைப் பெருக்கி உலக நாடுகளோடு முனைந்து போட்டியிடும் ஜப்பான், மக்கள்சைனா போன்ற நாடுகளின் குடிசைத் தொழில் வளர்ச்சி உலக நாடுகளை வியக்கச் செய்கிறது!

நம் நாட்டு குடிசைத் தொழில்கள் பொதுவாக மூன்று வகையாகப் பிரிந்திருக்கின்றன: மறைந்தவை முதல் வகை. முப்பத்திரண்டு முழச் சேலையையும் மோதிரத்திற்குள் மறைத்துவைக்கும் அளவிற்கு வலிவுள்ள மெல்லிய நூலை நூற்கும் நம் இந்தியரின் ஆற்றலை, சுயநலக் கும்பினியாரும் அவர்தம் ஏகாதிபத்திய வெறியர்களும் அழித்துவிட்டனர். ஆனால் தற்போது காந்தீயத் திட்டத்திலுள்ள கையால் நூல் நூற்றலை காலத்திற்கேற்ப புதுப்பித்து, குடியானவர்களும் பிறரும் ஓழிந்த நேரங்களில் நூல் நூற்றுப் பயன்பெற ஊக்கமளிக்கலாம்.

பெரிய தொழிற்சாலைகளோடு அர்த்தமற்ற முறையில் கடும் போட்டியிட்டு தன் அழிவிற்கு குழிதோண்டிக் கொண்டிருக்கும் சில குடிசைத் தொழில்கள் இரண்டாம் வகை; காலத்திற்கேற்ப மாற்றத்திற்கு இடமளிக்காமல் பரம்பரையாக பழைய தொழிலையே மேற்கொண்டிருப்பவர்களும் உண்டு; அல்லது சுய நலக்காரர்கள் தங்கள் சுரண்டல் ஊற்று வற்றாமல் இருப்பதற்கென சில குடிசைத் தொழிலுக்கு கடன் ஊட்டி வருவதும் காரணமாகும்!

தன்னோடு ஊறிப்போன சில குறைகளையும், மாற்றமுடியாத பலவீனத்தையும் பெற்றிராத சில குடிசைத் தொழில்களை தற்கால நவீன தொழிலில் முன்னேற்றத்திற்கேற்ப புதுப்பித்துக் கொள்ளலாம்! இது மூன்றாம் வகை: தற்பொழுது குடிசைத் தொழிலில் பலவித நவீன இயந்திர சாதனங்களின் உபயோகப்படுதல் சர்வ சாதாரணமாகி வருகிறது. தானாக இயங்கும் இயந்திரங்களின் உதவியேயின்றி, பெரும் உற்பத்தியை, தொழிற்சாலைகளைவிட கணிசமான அளவிற்கு குறைந்த அடக்கவிலைக்கு பொருள்களை உற்பத்தி செய்யும் நிலையை நோக்கி குடிசைத் தொழில் வளர்ச்சிபெற்று வருகிறது. எக்காலத்தும் வாங்கி உபயோகிப்போரின் விருப்பமும், சில வகைப் பொருள்களில் பல ரகங்களையே போற்றி வாங்கி வந்திருக்கிறது. வாங்கி உபயோகிப்போரை தன்னருகே வைத்துக்கொண்டு, விரும்பி வாங்கி உபயோகிப்போரின் அபிலாசைகளைக் கூர்ந்து கவனித்துவரும் வாய்ப்புப் பெற்றிருப்பது குடிசைத்தொழில் ஒன்றேதான்!

உத்திரவாதமான
கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ்
ராஜ்யகைத்தறிநெசவாளர்
கூட்டுறவு சங்கத்திடம்
அங்கீகாரம்பெற்றவர்கள்
ஸ்ரீஜெயலட்சுமி
கலர் ஒர்க்ஸ்
சுப்ரமணியசெட்டிவீதி, திருப்பூர்
D.R.S.S.

கிராமீயப் பொருளாதாரக் கட்டுக்கோப்பு இன்னும் முழுதும் சிதைந்து விடவில்லை; கிராமீயச் சுயதேவைப் பூர்த்தி இன்னும் எட்டளவிலேயேயிருக்கிறது. சில வகைக் குடிசைத் தொழில்கள் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான பொருள்களை ஆக்கித்தரும் தன் புனிதப் பங்கைச் செலுத்திக்கொண்டுதான் இருக்கின்றன! நவீன இயந்திரத் தொழில்கள் இதுவரை ஒரு சிறிதளவே நம் நாட்டில் வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மொத்த ஜனத்தொகையில் பெரும் பகுதியினராகும் 'நம் நாட்டில் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 94 பேர் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்; நூற்றுக்கு 0·6 பேர்தான் இயந்திரத் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தியாவிலுள்ள குடிசைத் தொழில்களிலேயே முக்கியமானதும், பெரிதும் தொழில் வன்மை பெற்றதும் கைத்தறி நெசவுத் தொழிலேயாகும்!

'நன்னம்பிக்கை முனையிலிருந்து சீனாவரையிலும் ஆண்களும் பெண்களும் அணிந்திருப்பது இந்திய கைத்தறித் துணியே என்ற புகழ்ச்சிச் சொல் இன்று முழு உண்மையாக இல்லாவிட்டாலும் கைத்தறி நெசவுத் தொழில் இன்று நெருக்கடி நிலைமையில் துடித்துக்கொண்டிருந்த போதிலும் தக்க முறையில் கைத்தறி நெசவுத்தொழிலை அமைக்கப் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் கைத்தறிக்கு சுபிட்சமான எதிர்காலமிருக்கிறதென்பது அறிஞர்களின் கருத்து.

(தொடரும்.)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறது. அத்தொகையை சரியாக விநியோகிப் பதற்கென ஒரு கமிட்டியையும் நகர சபை நிறுவி யிருக்கிறது.

கோவை நகரசபையின் இம் முடிவு பாராட்டப்பட வேண்டியதே. நகர சபைகள், ஜில்லா போர்டுகள்போன்ற ஸ்தாபனங்கள் தேவையற்ற படாடோபத்துடன் கூடிய பல நிதிகளுக்குப்பணமளித்து வந்திருக்கின்றன. ஆனால் இதுவரை கோவை நகரசபை இப்போது எடுத்துக் கொண்ட முடிவைப்போல (தனக்கு வரி செலுத்தும் மக்களுக்கு) நல்ல ஒரு காரியத்துக்காக நிதியளித்து வழக்கம் இல்லை! இந்தத்துறையில் முதல் நடவடிக்கை கோவை நகரசபை எடுத்துள்ளதற்காக கோவை மக்கள் பெருமைப்பட வேண்டும்.

இது போன்ற நிவாரண வேலைகளில் ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல பணிசெய்ய முடியும். தனி நபர்களின் நிவாரண கமிட்டிகளைவிட நகரசபை போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் முன்முயற்சி எடுத்து ஏனைய பிரமுகர்களையும் பொதுஜன ஸ்தாபனங்களையும் சேர்த்து நிவாரணக் கமிட்டிகள் அமைத்து, நிதி வசூலித்து நல்ல திட்டங்கள் வகுத்து நிவாரண வேலைகளை நடத்துவது ஒழுங்காகவும் நன்றாகவும் இருக்கும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் இத்தகையநிவாரண வேலைகளுக்கு எளிதாகக் கிடைக்கும்.

கோவை நகர சபையைப் பின்பற்றி சென்னை ராஜ்யத்திலுள்ள ஜில்லா போர்டுகள், நகரசபைகள் பஞ்சாயத்து போர்டுகள், ஆகிய ஸ்தல ஸ்தாபனங்கள் தத்தம் பிரதேசங்களில் வேலையில்லாதோரின் நிவாரணத்திற்காக—குறிப்பாக கைத்தறி நெசவாளர்களின் பஞ்ச நிலைமையை போக்குவதற்காக நிதி ஒதுக்கவும், நிவாரணக் கமிட்டிகள் ஏற்படுத்தியும் பணியாற்ற வேண்டும் என விழைகின்றோம்.

தபால் மூலம் ஜவுளிப் பார்சல்.

இந்திய யூனியனுக்குள் ஜவுளியையும் நூலையும் தபால் பார்சல் மூலம் அனுப்புவதற்கு இதுவரை இருந்த தடையை சர்க்கார் இப்போது நீக்கிவிட்டிருக்கிறது.

சென்ற வருஷம் மே மாதத்தில் அதற்கு முன்னால் தபால் மூலம் ஜவுளிகள் அனுப்பப் பட்டு வந்ததை சர்க்கார் தடை செய்தனர். இப்போது ஜவுளி தேக்கம் ஏற்பட்டுள்ள நிலைமையில் அதை நீக்கியுள்ளனர். ஜவுளியைத் தபால் மூலம் அனுப்புவதனால் எப்போதும் பாதகம்ஒன்றுமில்லை. தேக்கம் ஏற்படும்போது மட்டும் அனுப்பலாம் மற்ற காலத்தில் கூடாது என்று சர்க்கார் கட்டுதிட்டம் விதிப்பது சரியானதல்ல. எனவே ஜவுளியைத் தபால்பார்சல்மூலம் அனுப்புவதை இனி சர்க்கார் தடை விதிக்க வேண்டியதில்லை.

ஜவுளி, நூல் சாய தொழில்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு....

ஜி. ஒ. 146, தேதி. 17-4-52.

சென்னை விற்பனை வரி சட்டத்தின் 6 (1) பிரிவின்படி சென்னை கவர்னர், மாகாண ஜவுளி, நூல் சாயமிடுவது அச்சிடுவதுஆகிய தொழில்களுக்கு, 1950 ஏப்ரல் 1ந் தேதி முதல் 1951 மார்ச் 31 தேதிவரையான ஒருவருஷகாலத்திற்கு விற்பனை வரி சட்டத்தின் 3 (1)ம் பிரிவின்படி செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களித்துள்ளார்.

குறிப்பு:—ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது தடவையாக 1950—51 ஆண்டிற்கு விதிவிலக்கு சர்க்காரால் அளிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ்ராஜ்யடெக்ஸ்டைல் சாய, அச்சுத் தொழிற்சாலையாளர் சங்கத்தார் கடந்த 6-5-52 தேதியன்று சென்னையில் நிதி அமைச்சரைக் கண்டு பூரண விலக்கு கோரியிருக்கிறார்கள்.

—ஆசிரியர்.

A 1605, தோப்புப்பட்டி சாலியர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

அம்பலப்புளி பஜார் : : இராஜபாளையம் P. O.

கைத்தறி ஜவுளிகள்! உயர்ந்த தரத்தில்! குறைந்த விலையில்!

எங்கள் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் 50x12 காடாபீஸ், ஷர்ட்டிங்பீஸ், நேருஷர்ட்டிங், வேஷ்டி, துண்டு ஆகிய ரகங்கள் மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் மிகவும் மலிவான விலையில் கொடுக்கப்படும்.

தங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்.

ஆ. வைத்திலிங்கம், பிரஸிடெண்ட்.

PUBLIC LIBRARY

கைத்தறி

வேட்டி புடவைகள் நெய்திடுவான் — அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப்பஞ்சம்
— திருமூர்த்தி.

● கோவை 15—5—52 ●

பஞ்ச நிவாரண உதவி விஸ்தரிக்கப்படவேண்டும்.

நம் ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பை ராஜாஜி அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. பதவி ஏற்றுக்கொண்டதும், புதிய மந்திரி சபையினர், கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில்—அவர்களின் கஷ்ட நிவாரணத்திற்கென கோவை ஜில்லாவுக்கு மட்டும் ரூபாய் பத்தாயிரம் நிதி உதவியிருக்கிறார்கள். இந்த நிதி உதவி, கிட்டத்தட்ட 60 ஆயிரம் நெசவாளர் குடும்பங்களைக்கொண்ட கோவை ஜில்லாவிற்குப் போதுமானதாக இல்லையென்றாலும், நெசவாளர்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்பதில் சர்க்கார் கவனம் செலுத்தத் தலைப்பட்டுள்ளனர் என்பதைஎண்ணி இம்முயற்சியை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதேபோன்று நெசவாளர்களின் ஸ்தாபனங்களும் வரவேற்குமென்பதில் சந்தேகமே இல்லை.

இந்த ரூபாய் பத்தாயிரமும் உருப்படியான வகையில் செலவழிக்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் அக்கரை காட்டும் நாம் இச்சந்தர்ப்பத்தில் வற்புறுத்துவதுடன், இதே போன்று பஞ்ச நிவாரண நிதி உதவியை ராஜ்யமெங்கிலுமுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும் கோருகிறோம். கோவை ஜில்லா நெசவாளர்கள் மட்டும்தான் இன்றைய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறாகள் என்று சொல்ல முடியாது. கோவை ஜில்லாவைப் போன்றே ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள நெசவாளர்களும் நெருக்கடியின் கோரத் தாக்குதலுக்கு இலக்காகி பஞ்சைகளாகி வாழ்கின்றனர்.

அப்படிப்பட்ட மக்களுக்கு, வெறும் கஞ்சித்தொட்டி வைத்துக் காப்பாற்றிவிட முடியாது. அதற்குப் பதில் அவர்களது வாழ்க்கையில் ஓர் நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும். அதற்குப் பஞ்சநிவாரணகூட்டுறவுசொஸைட்டிகள் அமைக்கப்பட்டு, அவர்களுக்குத் தொழில்கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்கின்ற காரிய சாத்தியமான யோசனையை நாம் சென்ற மாத இதழின் தலையங்கத்திலேயே கூறியிருந்தோம். அந்த ஆலோசனையை நாட்டில்உள்ள சகல பத்திரிகைகளும், நெசவாளர்களும் எதிரொலித்து ஆதரித்துள்ளனர்.

எனவே, கோவை ஜில்லாவிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பத்தாயிரம் ரூபாயையும் கஞ்சித்தொட்டிகள் வைத்து வீண் விரயமாக்கக்கூடாதென நாம் கேட்டுக்கொள்கிறோம். அதே காலத்தில் அத்தொகையோடு, கலெக்டர், நெசவாளர்களின் கஷ்ட நிவாரணத்தில் அக்கரை காட்டும் நல்லெண்ணம்கொண்ட பலரிடத்தும், கூட்டுறவு மத்திய பாங்காரிடத்தும் இன்னும் சிறிது பங்குத்தொகையும், கடனும் வசூலித்து தாலூகாவிற்கு ஒரு பஞ்ச நிவாரண சொஸைட்டிவீதம் கூட்டுறவு இலாகாவின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பித்துக் கொடுப்பதுதான் பயன்தரத்தக்கதாகும் என்பதை நாம் எடுத்துக்காட்டுகிறோம்.

இதே போன்ற முறையில் ராஜ்யம் பூராவும் பஞ்சநிவாரண இயக்கங்களைத் தோற்றுவிக்க சர்க்காரும், ஜில்லா கலெக்டர்களும் முன் வர வேண்டும். இந்த சொஸைட்டிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் சர்க்காரின் தேவைக்கான—ஸ்தல ஸ்தாபனங்களின் தேவைக்கான ரகங்களாகவே இருக்கவேண்டும்; அப்படியிருந்தால்தான் துணித்தேக்கத் தலைவலி இந்த ஸ்தாபனங்களைத் தீண்டாது. தவிர உள்நாட்டு ரகங்களும் தயார் செய்யப்படவேண்டியதுதான். அந்த ரகங்களை ஒவ்வொரு பஞ்சநிவாரண சொஸைட்டியும் மாதத்தில் ஒரு வாரம் கிராம, நகர, தெரு விற்பனைகளுக்குக் கொண்டு சென்று விற்கவும், பொதுமக்களின் ஆதரவைப் பெறவும் முயற்சிக்க வேண்டும். இதனால் கைத்தறித் துணிக்குப் பொதுமக்களிடையே நல்லதொரு பிரச்சாரமும் ஏற்படும்.

இம்முறையில் அந்த பஞ்ச நிவாரண சொஸைட்டிகளை இயக்குவிக்க அதன் நெசவாள மெம்பர்களை சர்க்கார் ஊக்குவிக்க வேண்டும். பொதுமக்களிடம் சென்று "ஐயா நாங்கள் நெசவுத் தொழில் செய்பவர்கள்; எங்களுடைய தொழிலுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் இப்படி உங்கள் போன்றோரிடம் வந்து பிச்சை கேட்கிறோம்; ஏதாவது உதவி செய்யுங்கள்" என்று கேட்கும் கேவலத்தைக் காட்டிலும், நெசவாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த துணியை பொதுமக்கள் மத்

தியில் கொண்டுபோய்—ஒரு இயக்கமாக விற்பதை எப்போதும் இழிவாகக் கருதமாட்டார்கள்.

நாம் பிரஸ்தாபித்துள்ள மேற்கண்ட ஆலோசனையின் அடிப்படையில் பிரச்னையைத் தீர்க்காமல், வேறு எவ்வகையில் நிவாரணமளிப்பதாகச் சொன்னாலும் அது பயன் தரத்தக்கதாக இருக்காது என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறோம். கோவை ஜில்லாவிற்கென கொடுக்கப்பட்ட ரூபாய் பத்தாயிரத்தில் ஒரு ஆயிரம் ரூபாயை கோவை நகரத்திற்கென ஒதுக்கப்பட்டு கூலி நெசவாளர்களுக்குக் கஞ்சி வார்க்கப்படுகிறது.

கஞ்சித்தொட்டி ஏற்பாட்டை நெசவாளர்கள் வெறுக்கிறார்கள்; அவமானமாகக் கருதுகின்றனர். இம்முறையை கோவை நகரத்தில் அமுல் செய்யுமுன் நெசவாளர்கள் ஒப்புக்கொள்கின்றனரா, அல்லது வேறு மாற்று யோசனைகள் ஏதாவது கூறுகின்றனரா என்பதைக்கூட அறிய முயற்சிக்கப்படவில்லையென கூறப்படுகிறது. நெசவாளர்களின் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே, ஜில்லா முழுவதற்குமான நெசவாளர் நிவாரணத் திட்டம் எம்மாதிரி இருக்கவேண்டுமென்பதை நிர்ணயித்து, அதை ஏககாலத்தில் அமுலாக்க முயற்சிக்கு முன்னரே அவசரப்பட்டு கோவை நகரில் மட்டும் கஞ்சித் தொட்டி வைத்ததற்குக் காரணம் என்னவோ அறிய முடியா ரகசியமாகவேயிருக்கிறது.

இதே போலவே ராஜ்ய சர்க்காரும் அவசரப்பட்டிருக்கின்றனர் என அறிய வருகிறோம். சேலம், ராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்களைச் சேர்ந்த நெசவாளர் ஸ்தாபனங்கள், புதிய மந்திரி சபையினரின் நெசவாளர் கஷ்ட நிவாரண (ஒரு ஜில்லா) ஏற்பாட்டை சந்தேகிக்கின்றனர். 'கோவையில் நடைபெறப்போகும் பார்லிமெண்ட் உபதேர்தலில் நெசவாளர்களின் வோட்டுகளைப் பெறவேதான் ராஜ்ய காங்கிரஸ் சர்க்கார் கோவை ஜில்லாவிற்கு பதவி ஏற்றதும் ரூபாய் பத்தாயிரம் நிவாரண நிதி கொடுத்திருக்கின்றனர்; இல்லையேனில் ஏன் எங்கள் ஜில்லா நெசவாளர்களுக்கும் அம்மாதிரி நிவாரண உதவிக்கு உத்திரவிட்டிருக்கக்கூடாது' எனக்கேட்கின்றனர். 'நிதி அமைச்சர் கோவையைச் சேர்ந்தவர் என்பதனாலா கோவைக்கு இவ்வுதவி முதன் முதலாகக கிடைத்தது' என்றும் குத்திக் கேட்கின்றனர்.

இக்கேள்விகளுக்கு அர்த்தமுண்டா இல்லையா என்பதல்ல நாம் சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளவேண்டியது. அதற்குபதில் இக் கேள்விக்குப்பின்னால் மறைந்துநிற்கும் அதிருப்தியையே கணக்கில் கொள்ளவேண்டும். ராஜ்யமெங்கிலுமே உள்ள நெசவாளர்கள் தங்களின் துயர்களைத் துடைக்க வேண்டுமெனக் கோரும்போது, ஒரு ஜில்லாவிற்கு மட்டும் ரூபாய் பத்தாயிரம் வழங்குவது என்பது மற்ற ஜில்லாக்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு இயற்கையாகவே சந்தேகத்தை உண்டாகத்தான் செய்யும். இதைக் கண்டு சர்க்காரோ, அல்லது சர்க்காரின் ஆதரவாளர்களோ கோபப்பட்டுப் பயனில்லை. அதற்குப்பதில் அவர்களின் அதிருப்தியைப் போக்க திட்டமான நடைமுறைகள்மூலம் செயல்பட சர்க்காரை அவர்கள் தூண்ட வேண்டும்.

எனவே, நாம் சென்ற இதழிலும், இத் தலையங்கத்தின் முற்பகுதியிலும் பலமாக சிபார்சு செய்துள்ள—நடைமுறைக்கு ஏற்ற—நிச்சயமானதும் நிரந்தரமானதுமான பலனை நெசவாளர்களுக்கு அளிக்கவல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு பரிகாரம் தேடும் வகையில் ராஜ்ய சர்க்கார் நடவடிக்கையெடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நடவடிக்கை ராஜ்யம் பூராவுக்குமாக இருக்கவும்வேண்டும் என்றும் நாம் வற்புறுத்துகிறோம்.

ஏக்கம்.

ஏழை நெசவாளர் — வாழ்வில்
இன்பம் மலர்ந்திடுமோ
கூழில்லாக் கூக்குரல்கள் — ஒழிந்து
குதூகலம் பொங்கிடுமோ

பண்டை நாளினைப்போல் — கைத்தறி
பாரிலுயர்ந் திடுமோ
அண்டை நாட்டினரும் — கைத்தறி
ஆடையைப் போற்றுவரா

அலைகடல் கடந்து — நெசவோர்
அந்நிய நாடு சென்று
கலை பொங்கும் ஆடைகளை — விற்று
களிப்புடன் திரும்புவரா

வள்ளுவர் பொன்மொழியை — இந்த
வையகம் உணர்ந்திடுமோ
கள்ளுண்ட வண்டுபோல — நெசவாளர்
களிப்புடன் வாழ்குவரா

இரா. அவையபழகன்.

நாட்டுச் செய்தி

விற்பனை வரி அதிகாரிகளின் மகாநாடு.

"கைத்தறி ஜவுளி, கையினால் செய்யப்பட்ட பூட்சுகள், வளையல்கள், சமைத்த உணவு முதலியவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்" என்று மத்திய பிரதேச விற்பனை வரி அதிகாரிகளின் மகாநாடு சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தச் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு அமுல்நடத்துவதனால் சர்க்கார் வருமானத்தில் இரண்டு கோடி ரூபாய் குறையலாம் என்றாலும் மத்திய பிரதேச சர்க்கார் அவைகளை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை ராஜ்ய வியாபாரிகளுக்கு இந்த செய்தி ஆச்சரியத்தையளிக்கும். அதிர்ச்சியைக்கூட அளித்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய அனுபவத்தில் விற்பனைவரி அதிகாரிகளைப் பற்றித்தெரிந்ததெல்லால் அந்த அதிகாரிகள் "காமதேனு" வைக் கறக்க ஆரம்பித்தால் ஒட்டக் கறப்பதோடுமட்டுமல்லாமல் நாளைக்கும்கூட சேர்த்துக் கறக்க முயலுபவர்கள் என்பதுதான், விற்பனை வரி அதிகாரிகளைப்பற்றி இப்படிப்பட்ட நிர்ணயத்திற்கு ஆதாரத்துடன் வந்திருக்கும் வியாபாரிகளுக்கு "சாம்ராஜ்யத்தைக்கலைப்பதுதான் என்னுடைய முதல் வேலை" என்று சர்ச்சில் கூறும்போது ஜனநாயகவாதிகள் அடையும் மனநிலைமையைத்தான் அடைந்திருப்பார்கள்.

சர்க்கார் வருமானத்தை எப்படியாவது அதிகப்படுத்தித்தருகிற யந்திரத்தின் "உணர்ச்சியற்ற அங்கங்கள்" என்ற அவப்பெயருக்கு ஆளாகியுள்ள விற்பனைவரி அதிகாரிகள் தங்கள் மத்தியப் பிரதேச சகாக்களின் நியாயமான முடிவை ஆழ்ந்துகவனிப்பது நல்லது. கடமையைக் கண்டிப்பாகச் செய்வதற்காகத்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் அதிகார எல்லை வரம்புகடந்துவிடக்கூடாது என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

சென்னை ராஜ்ய விற்பனை வரி அதிகாரிகள் மகாநாடு கூட்டி விற்பனை வரியை ரத்து செய்யும்படி யோசனை கூறவேண்டும் என்பது நம் கருத்தல்ல. வரி விதிக்கும் போதும் வசூலிக்கும்போதும் அளவோடு நின்றுகொண்டாலே போதும்என்றுதான்நாம் சொல்ல விரும்புதெல்லாம்.

இரண்டு ஏக்கர்!

சென்ற மாதம் சேலத்தில் நடைபெற்ற தமிழ்நாடு நெசவாளர் காங்கிரஸின் மூன்றாவது மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி பேருரை நிகழ்த்துகையில் பழைய தொழிலாளர் தலைவர் (இப்போது மத்திய சர்க்காரின் தொழில் மந்திரி) ஸ்ரீமான் வி. வி. கிரி அவர்கள், நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களைத் துடைப்பதற்கு இதுவரையாரும் கண்டு பிடிக்காத புத்தம் புதிய யோசனை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

நெசவாளி கஷ்டப்படுகிறானா? அவனுக்கு நூல் கிடைப்பதில்லையா? நூல் கிடைத்தால் நெய்யும் துணிக்கு மார்க்கெட் இல்லாததால் வேலைசெய்ய முடியாது போகிறதா? பட்டினி கிடக்க வேண்டி வருகிறதா?

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்; No. A. 1601, ஸ்ரீவில்லிபுத்தூர்.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30" x 16 கெஜம், 50" x 12 கெஜம் காடா பீசுகளும், 4 x 8 வேஷ்டி மடிகளும், 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும், 50" x 12 கெஜம் பீசுகளும், 45" x 7 கெஜம் பல கலர்களில் பட்டுப்பேட்டுப் போட்ட சேலைகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! **முன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்**

A. K. ஞானியார், செயலாளர். பெ. குருசாமி, தலைவர்.

"கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ளகொடு நெசவாளி குடும்பத்துக்கு இரண்டு நிலம்" என்றார் ஸ்ரீயான் கிரி.

பரம்பரை பரம்பரையாக நிலத்தில் பாடுபடும் விவசாயியை நிலத்தை விட்டுத் துரத்துகிறது நில பிரபுத்துவம். "நிலத்தைப் புனர் விநியோகம் செய், உழுபவனுக்கு நிலம் கொடு" என்று கோரிக்கை போடுகிறார்கள் விவசாயிகள். அப்படி புனர் விநியோகம் செய்தாலும் லாபகரமாகப் பயிர்செய்யும் அளவு எல்லாவிவசாயிக்கும் அளிக்க நிலம் இல்லை என்கிறார்கள் புள்ளி விபர நிபுணர்கள்.

இந்த லட்சணத்தில் "குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடு" என்கிறார் கிரி.

வேலைக்கு வேண்டிய நூலும், உற்பத்திக்குத் தேவையான மார்க்கெட்டும் இருந்தால் வாழ்க்கைக்குத் தேவையானதை நெசவாளி பெற்றுக்கொள்வான். அதை அடைய அவனை விடுவதில்லை பணமுப முதலாளித்துவம். இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டோ அல்லது தெரிந்துகொள்ளாமலோ அவனுக்கு நிலத்தைக் கொடுக்கச் சொல்கிறார் கிரி.

தலைமை வகித்துப் பேசுகையில் எதையாவது பேசியாக வேண்டுமே என்பதற்காக வாயில் வந்ததை கூறிவிட்டார் போலிருக்கிறது. இல்லாவிட்டால் பழைய தொழிலாளர் தலைவர்-தொழிலாளர் மந்திரி, கிரிக்கு "இரண்டு ஏக்கர் நில தான இயக்கம்" காரிய சாத்தியமானது தானா என்பது கூடவா தெரியாமல் போயிருக்கும்?

கூட்டுறவு இயக்கத்தில் அதிகாரிகளின் தலையீடு

"கூட்டுறவு சங்க நிர்வாகத்தில் சர்க்கார் அதிகாரிகள் தலையிட்டு அதிகக் கட்டுப்பாடுகளை விதிப்பதே இந்த இயக்கம் சரியான அளவில் வெற்றி பெறாததற்கு காரணம். அநேக அதிகாரிகள் கூட்டுறவு சங்க நிர்வாகிகளைப் பள்ளிக்கூடத்தில் மாணவர்களை நடத்துவதைப்போல நடத்துகிறார்கள்" என்று மங்களூரில் நடைபெற்ற தென் கன்னடம் ஜில்லா கூட்டுறவு சங்கங்களில் 6-வது மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பார்லிமெண்டின் மேல் சபை அங்கத்தினர் ஸ்ரீ சதாநந்த ஹெட்கே கூறியிருக்கிறார்.

கூட்டுறவு இயக்கத்தைச் சர்க்கார் நிர்வகித்துவரும் லட்சணத்தை சதாநந்த ஹெட்கே இப்படிக் கூறுவதன் மூலம் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் அக்கரையோடு பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவுசெய்து ஒரு இலாகாவையே அரசாங்கம் நிர்வகிக்கிறது. அந்த இலாகாவின் அதிகாரிகளுடைய வேலை கூட்டுறவு சங்க நிர்வாகிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும். அவை வளர்ச்சியடைய துணைநிற்கவேண்டும்; ஆனால் உண்மையில் நடப்பது இடையூறாக இப்பதுதான். பலமுறை இந்த வாதத்திற்கு ஆதாரமான சம்பவங்கள் "கைத்தறி"யில் வெளியிடப் பட்டிருக்கின்றன.

சர்க்கார் அதைப்பற்றி கவனித்தாகக் காணவில்லை. இப்போது பார்லிமெண்ட் மேல் சபை அங்கத்தினர் ஒருவரே அதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

எடுத்துக் காட்டுவதோடு நிற்காமல் அதற்குப் பரிகாரம் காண அவர் சட்டசபையிலும் போராடவேண்டும். அவரோடு சேர்ந்து கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையுள்ள சட்டமன்ற அங்கத்தினர்களும் சட்ட மன்றங்களிலுள்ள நெசவாளர் எம். எல். ஏக்களும் போராடவேண்டும்.

நெசவாளர்களுக்கு கோவை நகரசபை உதவி

கோவை நகரில் வேலையின்றி உணவுக்குக் கஷ்டப்படும் நெசவாளர்களுக்கும் ஏனையவர்களுக்கும் நிவாரணமளிப்பதற்காக 10 ஆயிரம் ரூபாயைக் கொடுக்க கோவை நகரசபை முடிவு செய்

(11-ம் பக்கம் பார்க்க.)

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள் துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

சாய, அச்சுத் தொழில்களுக்கு விற்பனை வரி கூடாது.

சென்னை ராஜ்ய டெக்ஸ்டைல் சாய, அச்சுத்தொழிற்சாலையாளர் சங்கத்தார் நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களை 29-4-52 தேதி கோவையில் பேட்டிகண்டு சமர்ப்பித்த மகஜர்.

மதிப்பிற்குரிய ஐயா,

முதலில் எங்கள் தொழில் ஒரு குடிசைத் தொழில் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம், எங்கள் தொழிலில், எங்கள் வாடிக்கைக்காரர்களால் சாயமிடவும் அச்சிடவும் எங்களிடம் தரப்படும் நூல் & துணி ஆகியவைகளைப் பல ஆட்களிடம் பிரித்துக்கொடுத்து அவர்களிடமிருந்து அவைகளை செய்து பெறுகிறோம். எங்களால் செய்யப்படும் இந்த வேலைக்கு எங்கள் வாடிக்கைக்காரர்களிடமிருந்து வேலைக்கான கூலியைப் பெறுகிறோம்.

நான்கு வருடங்களுக்கு முன்னால் வரை கால நிலை நன்றாக இருந்தது. எங்கள் நுண்கலை (சாயமிடுவதும், அச்சிடுவதும்) திருப்தியாக நடந்துவந்தபோது எங்கள் கஷ்டங்கள் ஆரம்பித்தன. பருவ மழை தவறியது. தண்ணீருக்குத் தட்டு ஏற்பட்டது. எங்கள் தொழிலின் மூலப்பொருள்களான மில் நூலும், துணியும் பற்றாக்குறைப் பண்டமாகவும் கிடைப்பதற்கு அரிதான பொருள்களாகவும் ஆயின. இந்த நெருக்கடியான கட்டத்தில் சென்னை சர்க்காரின் விற்பனை வரிச் சட்டம் நாங்கள் எங்கள் வாடிக்கைக்காரர்களிடம் வசூலிக்கும் கூலிக்கும் வரி கேட்க வந்தது. வர்த்தக வரி இலாகா எங்கள் தொழிலை "ஒர்க்ஸ் காண்ட்ராக்ட்" முறை என்று வியாக்கியானம் தந்தது.

நாங்கள் செய்யும் கூலி வேலை எவ்விதத்திலும் "விற்பனை" ஆகாது. சர்க்காரே எங்கள் 'தொழில்' ஒரு "செய்வகை" (Processing) என்று பல கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறது. விற்பனை வரியை வசூலித்துவிடவேண்டும் என்பதற்காக இந்தத் தொழிலை "ஒர்க்ஸ் காண்ட்ராக்ட்" என்று வர்ணிப்பது, பிரஜைக்கு எதிராகவும் சர்க்காருக்கு ஆதரவாகவும் ஒரு வரி வசூல் கொள்கையைத் தவறாக வியாக்கியானம் செய்வதும், நீதிக்குப் புறம்பானதும் ஆகும்.

விற்பனை வரிச் சட்டத்தை நேராக வியாக்கியானம் செய்தால் அது எங்கள் "செய்வகை' தொழிலுக்கு வரி விதிப்பதை அனுமதிக்காது. இதை நிதி மந்திரியவர்களுக்கு எடுத்துக்காட்டியதன் பேரில் அவர் 31—5—50 முடிய இரண்டு வருடங்களுக்கு எங்கள் தொழிலுக்கு வரி விலக்கு அளித்தார்.

1950—51-ம் வருஷத்திற்கான வரி வேண்டும் என்று அதிகாரிகள் எங்களைத் துன்புறுத்த ஆரம்பித்துவிட்டார்கள். தொழிலில் இடப்பட்ட மூலதனம் குறைவு, தொழில் விற்பனை வரிக்கு உட்பட்டதல்ல, நாங்கள், சிரமப்படும் குடிசைத் தொழில்காரர்கள் என்ற காரணங்களால் எங்களால் வரி செலுத்த முடியவில்லை. அதிகாரிகளின் நடவடிக்கைகள், பயமுறுத்தும் வாரண்டுகள் இதர இழிவு படுத்தும் ஏற்பாடுகள் எங்களை எதிர்நோக்க ஆரம்பித்தன. அதிருஷ்டவசமாக, தங்களை இது சம்பந்தமாக பேட்டிகாண நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கையில், 25-ம் தேதி பத்திரிகைகளிலே, 1950–51-ம் வருஷத்திற்கும்கூட வரி விலக்கு எங்களுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டோம். எங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விலக்கு நிரந்தரமானதாக ஆக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மீண்டும் மீண்டும் கிளர்ச்சி செய்வதை அது நிறுத்திவிடும். நாங்கள் கேட்பது வெறும் சலுகையோ சாதாரண விலக்கோ அல்ல என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். விற்பனை வரிச் சட்டமே எங்களைப் பாதிக்காது என்றே நாங்கள் அர்த்தப்படுத்துகிறோம். இந்த சாதாரண அடிப்படையை அங்கீகரிக்கவேண்டும் என்றே நாங்கள் கோருகிறோம். எங்களுக்கு வரி விதித்து வசூலித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டியுள்ள விற்பனை வரி இலாகாவுக்கு இந்தஎளிய உண்மையைப் புரியவைக்க எங்களால் முடியவில்லை.

சம்பந்தப்பட்ட உதாரணத்திற்கு காகித அச்சுத் தொழிலை எடுத்துக்காட்டுகிறோம். அத் தொழிலில் காகிதத்தை வாடிக்கைக்காரரே தந்து அச்சகம் அச்சிடுவதை மட்டும் செய்யும்போது அதற்கு வரி கிடையாது. எங்கள் தொழிலும் எல்லாவிதத்தாலும் அதேபோன்றதுதான்.

எனவே, நியாயபூர்வமான ஆலோசனையின்பேரில் நாங்கள் எடுத்துக் காட்டியவைகளைப் பரிசீலித்து, எங்கள் சாயமிடும், அச்சிடும் தொழில்கள் விற்பனை வரிக்குட்பட்டதல்ல என்ற உத்தரவை வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

P. G. பாலசுப்ரமணியம், தலைவர்.

Co-optex

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஜவுளிகள்

பெரிதும் விரும்பப்படுவதின் காரணம் அவற்றின்:

- ★ உயர் ரகம்
- ★ மோஸ்தர்
- ★ உழைப்பு
- ★ கெட்டிச்சாயம்
- ★ விலை

வேஷ்டிகள்—புடவைகள்—ஷர்ட்டிங்— துவாலைகள்
மேஜை விரிப்புகள்—அலங்கார ஜவுளி வகை
போர்வைகள்—கைக்குட்டைகள் முதலியன

இந்த ராஜ்யம் முழுவதும் உள்ள எங்கள் எம்போரியங்களில் ஏதாவது ஒன்றிற்கு விஜயம் செய்து உங்களுக்குத் தேவையானதை வாங்கிக் கொள்ளுங்கள்.

மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

"ஹாலோவேஸ் கார்டன்ஸ்" 34, பாந்தியன் ரோடு,
எழும்பூர் :: சென்னை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையின் அடிப்படையில் செய்யப்படும் உற்பத்தியின் அனுகூலத்தை இது நன்கு விளக்குவதாகிறது.

ராஜ்ய சங்கத்தின் உற்பத்தி சென்டர்களாக எல்லா நெசவு சங்கங்களும் அமைவதாக வேண்டும். இதுதான் இப்போது நாம் மேற்கொள்ளவேண்டிய முக்கியமான வேலை. வேண்டிய நூலைக் கொள்முதல்செய்து பிரதம சங்கங்களுக்கு சப்ளை செய்யும் பொறுப்பு ராஜ்ய சங்கத்தைச் சார்ந்த விஷயமாகும். சங்கங்களுக்கு நூலை விற்பதென்பதை ராஜ்ய சங்கம் ஏற்றுக்கொள்ளாது. எந்த விதமான சரக்கு தயார் செய்வது என்பதுபற்றி பிரதம சங்கங்கள் ராஜ்ய சங்கத்திடம் யோசனை கேட்டு அதன்படி ஒரு திட்டமானரகத்தைத் தயாரிக்கவேண்டும். மெம்பர்களுக்கு கூலி நிர்ணயிக்கும் விஷயத்திலும், ராஜ்ய சங்கமானது பொறுப் பேற்றுக்கொண்டு ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரே மாதிரியான அடிப்படை ரீதியில் கூலி விகிதத்தை நிர்ணயிக்கும். வழங்கப்பட்ட நூலுக்கு ஏற்ப தயார்செய்த சரக்குகளை அப்படியே பிரதம சங்கங்கள் ராஜ்ய சங்கத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும். சரக்கு டெலிவரி எடுக்கும் முன்பு அதற்கு ஏற்பட்ட கூலியை ராஜ்ய சங்கம் சம்பந்தப்பட்ட பிரதம சங்கத்துக்குக் கொடுத்துவிடும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பூரா சரக்குகளின் விற்பனைக்கு ராஜ்ய சங்கம்தான் வழிவகைகள் செய்யும். சரக்குக்கு மார்க்கெட் கண்டுபிடிப்பதில் பிரதம சங்கங்கள் கவலைப்படவேண்டியது இல்லை. இவைகள் வியாபாரலைசென்சுகூட வாங்கவேண்டியதில்லை. வழங்கப்பட்ட நூலை மெம்பர்களுக்கு வினியோகம் செய்வது, நெய்த சரக்கை மெம்பர்களிடமிருந்து வாங்கி ராஜ்ய சங்கத்துக்கு சேர்ப்பிப்பது, மெம்பர்களுக்குக் கூலி பட்வாடா செய்வது ஆகிய காரியங்களுக்காக, ராஜ்ய சங்கமானது பிரதம சங்கங்களுக்கு அவைகளின் உற்பத்தியை அனுசரித்து மானிய உதவி அளிக்கும். அதைக்கொண்டு பிரதம சங்கங்கள் தங்கள் சிப்பந்தி சாதல்வார் செலவுகளை ஈடுசெய்துகொள்ளும். பிரதமசங்கபஞ்சாயத்து சபையானது புதிய தறிகள் சேர்த்தல், வழங்கப்பட்ட நூலுக்கு ஏற்பட்ட அளவுப்படியும் நிர்ணயிக்கப்பட்ட தரவாரியாகவும் சரக்குகள் தயாரிக்கப்பட்ட விபரங்களுக்குக் கணக்குகள் வைத்தல் ஆகிய இன்னபிற விஷயங்களை கவனித்துக்கொள்ள வேண்டும்.

சரக்கு விற்பனைக்கு ராஜ்ய சங்கம் ஏற்பாடு செய்யும். உற்பத்தியைத் திட்டம்செய்வதில், ராஜ்யசங்கமானது பின்கண்ட முறையைக் கையாளும். மில்களிலிருந்து குறைந்தவிலைக்கு நூலைப்பெற்று அந்தந்த ஜில்லா தலைமைஸ்தானத்தில் இருப்புவைக்கும். மில் வாசல் விலைப்படியோ அல்லது சிறிது லாபம் சேர்த்தோ சங்கங்களுக்கு சப்ளை செய்யப்பட்ட நூல் கிரயத்தை ராஜ்ய சங்கமானது சம்பந்தப்பட்ட சங்கம் பேருக்குப்பற்று எழுதிக்கொள்ளும். ராஜ்ய சங்கத்தின் சொந்த லாரி கொண்டு பிரதம சங்கத்தின் வாசலில் நூல் சப்ளைசெய்யப்படும். சரக்குகளுக்கு வேண்டிய கலர் நூல்களையும் ராஜ்ய சங்கமே சப்ளைசெய்யும். எந்த பிரதம சங்கமும் நூலுக்கு கலர் துவைக்க இதனால் தனி ஏற்பாடு செய்ய வேண்டியது என்பது இல்லாமல் போய்விடுவதாகிறது. இன்னும் இது சம்பந்தமான இதர மூலப் பொருள்கள், ஆர்ட்சில்க், ஜரிகை முதலியவைகளையும் ராஜ்ய சங்கமே சப்ளைசெய்யும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட சரக்குகளை, சங்கத்துக்கு நூல் சப்ளைக்குப்போகும் ராஜ்ய சங்க லாரியே சங்கத்திலிருந்து டெலிவரி எடுத்துக்கொண்டுவிடும்.

உற்பத்தியானது தற்சமயம் ஜில்லா வாரியாக இருந்து வரும், உதாரணமாக, ஒரு ஜில்லாவில் நெசவாளிகள் வழக்கமாய் 60-நெம்பர் வரையுள்ள சரக்கு தயார் செய்பவர்களாயிருந்தால், அந்த நெம்பர் நூலுக்கு உள்ள ரகத்தைச்சேர்ந்த வேஷ்டி, சேலை வகை

S. No. 844 குருசாமிபாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

(ராசிபுரம் தாலூக்கா) குருசாமிபாளையம் P. O. (சேலம் ஜில்லா)

நேர்த்தியான ரகம்! **நியாயமான விலை!**

எங்கள் சங்கத்தின் தேர்ச்சிமிக்க 1800 அங்கத்தினர்களின் சொந்தத் தறிகளில் 40s 1 × 12 × 50" காடா காரிக்கன் பீஸ்களும், 40s 4 × 8 × 50" கெட்டி கொத்துகளும், 20, 30, 60, 100 நெ நூல்களில் கெட்டி கொத்துகளும், துண்டு மடிகளும், மற்றும் சேலம் புகழ் துண்டஞ்சு ரகங்களும் போற்றத்தக்க முறையில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார்செய்து வருகிறோம்.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

தேவைக்கு எழுதுங்கள். S. A. ராமலிங்கம், பிரசிடெண்டு.

களைத் தயார் செய்யும்படி மேற்படி ஜில்லாவிலுள்ள பிரதம சங்கங்கள்கேட்டுக் கொள்ளப்படும். இதற்கு ஏற்பட்ட கூலியை ராஜ்ய சங்கம் கொடுக்கும். ராஜ்ய சங்கம் நிர்ணயிக்கும் திட்டப்படியே இந்த சங்கங்கள் சரக்கு தயாரித்தல் வேலையை மேற்கொள்ளும். ராஜ்ய சங்கத்துக்குச் சேர்ந்த ஜில்லா விற்பனை டிப்போ அதிகாரியால் அந்த ஜில்லாவில் தயாரிக்கப்பட்ட சரக்குகள் அனைத்தும் டெலிவரி எடுத்துக் கொள்ளப்பட்டு ஜில்லாவிலுள்ள குடோனில் அவரால் இருப்பு வைக்கப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட சரக்குக்கு ஒரு பேடன்டும், டிரேட் மார்க்கும் இடப்பட்டு சரக்கு நயத்துக்கு உத்தரவாதமும் அளிக்கப்படும். ஜில்லா மார்க்கட்டிங்டிப்போவைச்சேர்ந்த அதிகாரியானவர் சரக்கு விற்பனையைப்பற்றிய நடவடிக்கையையேற்கொள்வார்.

சரக்கின் நயம் விலைஆகியவைகள் ஒரேதரமானதாயிருப்பதால் இதன் விற்பனை விஷயமானது சலீசாக்கப் படுவதாகிறது. இந்த ஏற்பாட்டால், ஒரு ஜில்லாவில் கூட்டுறவு முறையில் உற்பத்தியாகும் சரக்குகள் எல்லாம் ஒரே ஸ்தாபனத்தின் மூலமாக விற்கப்படுவதால், சங்கங்களிடையே விலை முதலிய விஷயமான வீண் போட்டி ஏற்படுவது தவிர்க்கப்படுவதாகிறது. இந்தராஜ்யத்தில் அதிக அளவில் கைத்தறி சரக்கு தயார்செய்யும் ஒரு முக்கிய ஸ்தாபனமாக, சென்னை ராஜ்யகூட்டுறவுநெசவாளர் சங்கம், அந்தஸ்துபெற்று மார்க்கெட்டில் விலைகளை அதனால் கட்டுப்படுத்த முடிகிறது. எந்த விதமான வழி வகைகளிலும் ராஜ்யசங்கத்துடன் போட்டியிடவல்ல தனி நபர் யாரும் மார்க்கெட்டில் இருக்க முடியாமல் இதனால் போய்விடும், மில்கள் தான் போட்டியிடலாம். ஆனால் அவைகளின் வியாபாரமுறையே வேறு. சரிசமத்துவமான முறையில் அவைகளின்போட்டி இருப்பதென்பது விவாதத்துக்குரிய பிரச்னையல்ல. கைத்தறி நெசவு சரக்கின் தரம், நயம் முதலிய அம்சங்கள் குறிப்பிட்ட ஒரு வகுப்பாரின் கவனத்தை எப்போதுமே கவர்ந்துள்ளதால் அவர்கள் வேறு சலீசான சரக்குகளை நாடமாட்டார்கள். சரக்கின் பேரில் விலையும், தரம் முதலியவைகளும் முத்திரையிடப்படுவதால் இவைகள்பற்றிய உத்தரவாதம் உபயோகிப்போருக்கு அளிக்கப்பட்டு விடுவதாகிறது.

நிதி வசதி

நம் ராஜ்யத்திலுள்ள 1094 நெசவு சங்கங்களிலும் சராசரி மாதம் ரூ. 70 லட்சம்பெறுமான சரக்கு தயார் செய்யப்படலாம். சுமார் 2 மாத சரக்கையாவது இருப்பு வைக்கவேண்டியதாய் இருக்கும், இதன்படி கணக்கிட்டால் ரூ. 2 கோடி மதிப்பு சரக்கை இருப்பு வைக்கவேண்டியதாகிறது. இதற்கு வேண்டியபணத்துக்குஎங்கேபோவது? ஒவ்வொரு ஜில்லா குடோன்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் அந்தந்த ஜில்லா பாங்குதான் பணலேவாதேவியைச் செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவில் சுமார் 40 சங்கங்கள் 5000 தறிகளுடன் வேலை செய்வதாக வைத்துக்கொண்டாலும் தறி ஒன்றுக்கு ரூ. 60 பெறுமான சரக்கு தயாரானாலும் மொத்த தறிகளில் மாதம் ரூ. 3 லட்சம் பெறுமான சரக்குசேர்ந்துவிடும். ஜில்லா குடோனில் 3 மாத சரக்குகள் இருப்புவைப்பதாக வைத்துக்கொண்டால், சுமார் ரூ. 9 லட்சம்சரக்கு மதிப்புஆகிறது. இந்த 40 சங்கங்களிலும் சேம நிதி, டிபென்சர்கள் நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், கையிருப்பு தொகை முதலியவைகள் இருக்கின்றன. இந்த நிதித் தொகைகள் எல்லாம் இந்தசங்கங்களுக்கு வியாபாரத்துக்கு தேவையில்லை. ஆனதுபற்றி இவைகளை ஜில்லா மத்திய பாங்கில் மேற்படி சங்கங்கள்போட்டுவைக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும்இந்நிதிகள் சுமார் ரூ 8லட்சம் இருக்குமென நம்பலாம். ஆங்காங்கு சிறிது ஏற்றத் தாழ்வு ஏற்படலாம்.

இந்த நிதித்தொகையைகொண்டு ஜில்லா விற்பனைடிப்போவிலுள்ள இருப்புச் சரக்குகளின் ஜாமீன் பொறுப்பின் பேரிலும் அந்தந்த ஜில்லா விற்பனை டிப்போவுக்கு தேவையான அளவுக்கு ரொக்கக் கடன் வசதியை ஜில்லா பாங்குகள் செய்து தரவேண்டும். இந்தக் கணக்கில் மேற்படி டிப்போ அதிகாரியானவர் வரவு செலவு செய்வார். டிப்போவில் உள்ள சரக்குகளை மொத்தமாக விற்கவும், ஜில்லாவிலுள்ள எம்போரியங்களுக்கும், வெளியிலும டிப்போவிலிருந்து சரக்குகளை அனுப்பி வைக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. ராஜ்ய சங்கத்துக்கும் விற்பனை டிப்போவுக்கும் உள்ள வரவு செலவு ரொக்கத்தில் நடைபெறுதல் வேண்டும். காஷ் கிரெடிட் கணக்குகளில் இருந்து செலவு செய்யப்பட்ட பணத்தை டிப்போவின் சரக்கு விற்பனையிலிருந்தோ அல்லது சரக்கை எம்போரியத்துக்கு மாற்றுவதிலிருந்தோ அவ்வப்போது ஈடுபண்ணி கொள்ளலாம்.

உத்திரவாதமான கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ் கைத்தறி
நெசவாளர் மாகாண
கூட்டுறவு சங்கத்தாரால்
அங்கீகாரம் பெற்றவர்கள்
வரதராஜ் & கோ
சாயத்தொழிற்சாலை
மீன்கரை ரோடு, பொள்ளாச்சி

ஒரு ஜில்லாவிலுள்ள சரக்கை இன்னொரு ஜில்லாவில் விற்பனை செய்வது போன்ற திட்டங்கள் பற்றிய ஏற்பாடுகளைப் பின்னால் நடைமுறையை அனுசரித்து நிர்ணயித்துக் கொள்ளலாம்.

கூட்டுறவு கைத்தறி நெசவு உற்பத்தியைமேற்படி திட்டமான முறையில் ஏற்படுத்துவதால், இயக்கம்மூலம் இன்றுநிலவியுள்ள போட்டா போட்டியைசமாளிக்க இயலுவதாகிறது. மில்களுடன் போட்டியிடவேண்டிய பிரச்னை எழுவதாயிருந்தாலும், குழித் தறிகள், தானாக இயங்கும் தறிகள் போன்ற விசைத் தறிகளைக் குடிசைக் கைத்தொழில் முறையில் கூட்டுறவு முறையில் நிறுவி உற்பத்தி செலவுகளை மில்களின் உற்பத்திச் செலவுகளுக்கு ஏற்ப நம்மால்குறைத்துக்கொள்ள முடியும். மேற்கூறியதிட்டத்துக்குபிரதம நெசவுசங்கங்கள் தான் ஏதாவது ஆட்சேபம் தெரிவித்தால் தெரிவிக்கலாம். ஏனெனில் அவைகளுடைய தனி நலனானது இத்திட்டப்படி ராஜ்ய சங்கத்துடன் ஒன்றுபட்டு விடுவதாகிறது. நடந்த 16வருஷ அனுபவ வாயிலாக துணிநெசவு செய்யும் தொழிலாளிக்கு ஒரு நிரந்தரமான நிலையும், சரக்கு உபயோகிக்கும் பொது ஜனங்களுக்கு நயமான சரக்கு குறைவான விலையில் கிடைக்கவும் வழிவகைகள் ஏற்படவில்லையென்றால், இப்போதைய ஏற்பாடுகளின் முறையை மாற்றியமைப்பதன் அவசியம் விளங்கவில்லையா? மெம்பர்களைச் சேர்ப்பதிலும், அவர்களுக்கு வேலை அளிப்பதிலும் இன்னும் இதர எல்லா வகைகளிலும் பிரதம சங்கங்களுக்குள்ள உரிமைகள் பாதிக்கப்படுவதாக இல்லை. அவைகள் தாங்களாக சொந்த வியாபாரம் செய்வதென்பதுதான் இல்லாமல் போய்விடுகிறது. அவைகளின் ஆஸ்திகள் நீண்டகால இன்வெஸ்ட்மெண்ட்களில் மத்திய பாங்குகளில் போடப்படுவதால் அதற்குநல்ல வருமானமும் கிடைக்கும். இத்துடன் ராஜ்ய நெசவு சங்கத்தால் அந்தந்த சங்கத்தின் சரக்கு உற்பத்தியின்பேரில் கொடுக்கப்படும் பண உதவியையும்கொண்டு சங்கங்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களைநிர்ணயித்துக்கொள்ளலாம். தவிர ஜில்லா விற்பனை டிப்போக்களின் நிகர லாபத்திலிருந்து மேற்படி லாபம் நிர்ணயிக்கும் முன்பு, பாதித் தொகையை சம்பந்தப்பட்ட பிரதம சங்கங்களுக்கு, அவைகளின் உற்பத்தியின் பேரில், நெசவாளிகளுக்கு போனஸ் வழங்குவதற்காக வழங்கவும் ஏற்பாடு செய்யலாம். ●

'கூட்டுறவு' 1-5-52

(இக்கட்டுரை மீது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அபிப்பிராயத்தை கோருகிறேன். — ஆ—ர்.)

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு, கோயமுத்தூர்.

நூல் விலையைக் குறைத்து நெசவாளர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்கவும்

வட்டியின்றி நீண்டகாலத் தவணைக்கு கடன் கிடைக்க ஐக்கிய நாணய சங்கங்களைத் தோற்றுவிக்கவும்

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்கா கைத்தறி நெசவாளர் மாநாட்டின் கோரிக்கைகள்,

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்கா கைத்தறி நெசவாளர்களின் மாநாடு 26—4—52-ந் தேதியன்று சத்திரப்பட்டியில் ராஜபாளையம் தொகுதி சட்டசபை அங்கத்தினர் டி. கே. ராஜு தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. தாலூக்கா முழுவதுமுள்ள நெசவாளர்களில் பெரும்பாலோர் மகாநாட்டிற்கு வந்திருந்தனர்.

வரவேற்பு கமிட்டி செயலாளர் ஏ. எர். சாமி அனைவரையும் வரவேற்றுப் பேசியபின்பு, தலைவர் டி. கே. ராஜு எம். எல். ஏ. அவர்கள் நெசவாளர்களின் துயர்களைத் துடைக்க அனைவரும் ஒன்றுபட்டு செயல்படவேண்டுமென்று தனது நீண்ட தலைமையுரையில் கேட்டுக்கொண்டார்.

பிற்பகல் நிகழ்ச்சியின்போது மதுரை சுந்தர ராஜன், விவசாயிகள் தலைவர் மணலி கந்தசாமி எம். எல். ஏ. ஆகியோர் நெசவாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கம் தக்கநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இன்றையநிலையில் நெசவாளர்கள் தங்களது ஸ்தாபனத்தை பலப்படுத்திக்கொள்வது மிக அவசியமென்றும், கைத்தறித் துணித் தேக்கம் தீர உடனடியாக சர்க்கார் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் மிக விளக்கமாகப் பேசினர். பின்பு கீழ்க்கண்டதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களாவன:—

(1) இன்றைய இன்பார்மல் ரேஷன் நூல் விநியோக முறை ஊழல் நிறைந்திருப்பதால் அதை அகற்றிவிட்டு, கட்டாய நூல் பங்கீடு முறையை அமுல் படுத்த வேண்டும். மேலும் நூல் விலையை 1945, 46-ம் ஆண்டு விலைகளுக்குக் குறைத்து நிர்ணயித்து தேவையான இடங்களுக்குத் தேவையான நெம்பர் நூல்களை ஒழுங்காக எல்லாத் தறிகளுக்கும் கிடைக்கும் முறையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிக்கவேண்டும்.

(2) துணி நூல் கட்டுப்பாடு சம்பந்தமான சகல அதிகாரங்களும் இன்றுள்ளதைப்போல் மத்திய சாக்கார் பொறுப்பில் இல்லாமல், அவ்வதிகாரங்களை அந்தந்த மாகாண சர்க்கார் பொறுப்பில் விடவேண்டும். மாகாண சர்க்கார் நெசவுத்தொழிலில் அவ்வப்போது ஏற்படும் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக **நெசவுத் தொழிலாளர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு நிரந்தரமான பாதுகாப்பு போர்டு ஏற்படுத்தி அவர்கள் கூறும் ஆலோசனைகளை சர்க்கார் அமுல் நடத்த வேண்டும்.**

(3) கூட்டுறவு சங்கங்களில் இன்று தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை சொஸைட்டி, சர்க்கார், நெசவுத் தொழிலாளர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட போர்டு ஏற்படுத்தி அப்போர்டு நிர்ணயிக்கும் விலைக்கு சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டும்.

(4) அன்னிய நாடுகளிலிருந்துவரும் ஜவுளிகளுக்கு தடை விதிப்பதன் மூலம் உள்நாட்டில் கைத்தறித் துணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

(5) இப்பொழுது உடனடியாக வறுமையில் வாடிடும் நெசவாளர்களைப் பாதுகாக்க 1949ல் சர்க்காரால் கொண்டுவரப்பட்ட "நெசவாளர் நிவாரண திட்டத்தை" கூட்டுறவு சங்கங்களின் மூலம் அமுல் நடத்தவேண்டும்.

(6) எல்லா தறிகளும் கூட்டுறவு சொஸைட்டிகளில் சேருவதற்கு அனுகூலமாக சர்க்கார் வட்டியில்லாக்கடனாக பணஉதவி செய்து சகல தறிகளையும் கூட்டுறவு சொஸைட்டியில் சேர்க்க வேண்டும்.

(7) நெசவாளர் பிராந்தியங்களிலெல்லாம் உடனடியாக ஐக்கிய நாணய சங்கம் ஏற்படுத்தி குறைந்த வட்டியில் நீண்டகாலத் தவணைக்கு கடன் கொடுக்க வேண்டும்.

(8) விட்டுப்போன தறிகளுக்கு அங்கங்கே யுள்ள நெசவுத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் தரும் புள்ளிவிபரப்படி சர்க்கார் உடனடியாகக் கார்டுகள் வழங்க வேண்டும்.

கண்ணைக் கவரும்
எண்ணற்ற
கைத்தறி ஜவுளிரகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு - ஈரோடு

(9) புதிதாக கொடுக்கப்படும் விசைத்தறிகளை கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுத்து அதற்கு வேண்டிய பண உதவியும் சர்க்காரே செய்துதர வேண்டும்.

(10) கூட்டுறவு சங்கங்களின் பாதுகாப்பிற்காக பிரிட்டிஷாரின் நேரடியான ஆட்சியில் மத்திய சர்க்காரால் மான்யமாக அளிக்கப்பட்டுவந்த 2 கோடி ரூபாயையும் மீண்டும் கொடுத்துதவி கூட்டுறவு சங்கங்களில் ஏற்படும் நியாயமான நஷ்டத்தை ஈடு செய்யத் தகுந்தஏற்பாடு செய்யவேண்டும்.

(11) கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்வதை பாதுகாப்பு போர்டின் உதவியுடன் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும். அல்லது மாகாண கூட்டுறவு சங்கத்தின் மூலமாக ஏற்றுமதிசெய்வதின்மூலம் கைத்தறி ஜவுளிகளை வெளி மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு விற்க முடியுமென்றும், அதன் மூலம் இத்துணிக்கு வெளி நாடுகளில் நல்ல கிராக்கி ஏற்படுத்தமுடியுமென்றும் இம்மகாநாடு கருதுகிறது.

(12) நெசவாளர்களுக்கு தோழமையாக இருந்து நெசவாளர்களை சுபிட்ச வாழ்வை நோக்கிச் செல்ல ஏதுவாக சகல தொழிலாளி — விவசாயி வர்க்கத்தையும் தங்களுடைய ஒத்துழைப்பை கொடுக்குமாறு இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது. நெசவாளர் ஸ்தாபனங்களும் பிற தொழிலாளி—விவசாயி வர்க்கங்கள் நசுக்கப்படும்பொழுது தன்னுடைய ஒத்துழைப்பை முழுமனதுடன் தரும் என இம்மகாநாடு உறுதி கூறுகிறது.

(13) மேற்கண்ட கோரிக்கைகளை சர்க்கார் நிறைவேற்றாவிட்டால் நெசவுத்தொழிலாளர்களின் ஒன்றுபட்ட கிளர்ச்சியைத் தவிர்க்கமுடியாது என இம்மகாநாடு சர்க்காரை எச்சரிக்கிறது.

மேலேகண்ட தீர்மானங்களைத் தவிர சதிவழக்குகளை வாபஸ் வாங்குதல், கிருமிக் குண்டுவீச்சைக் கண்டித்தல், ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சி ஏற்பட வேண்டும் என்பன போன்ற தீர்மானங்களும் நிறைவேறின.

மகாநாட்டின் முடிவில் கீழ்க்கண்டவர்களைக்கொண்ட தாலூக்கா நெசவாளர் சம்மேளன நிர்வாகக் கமிட்டி யொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்: சேத்தூர் எ.பி. சாமி, உபதலைவர்: இராமச்சந்திராபுரம் எ. குருசாமி, செயலாளர்: சத்திரப்பட்டி எ. எம். சாமி, உதவி செயலாளர்: புனல்வேலி எ. மாரிமுத்து, நிர்வாக உறுப்பினர்கள்: ஆர். ராமர், ம. சி. குருசாமி. பி. அய்யாத்துரை, கு. குருசாமி, சி. முத்தையா, கே. ஆதிமூலம், ச. அருணாசலம், உ. ஆ. கனுசுலிங்கம், வெ. சுப்பையா.

அவிநாசி நெசவாளர் கூட்டுறவு சங்க மகாசபைக் கூட்டம்

மேற்படி சங்கமகாசபைக் கூட்டம் அதன் தலைவர் ஸ்ரீ முருக முதலியார் தலைமையில் 1-5-52 தேதியன்று சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. மகாசபை 1950—51-ம் வருஷகதிய நிர்வாக சபையின் ரிப்போர்ட்டையும், ஆடிட் ரிப்போர்ட்டையும் ஏற்றுக்கொண்டு, 1952—53-ம் ஆண்டுக்கான உத்தேச பட்ஜெட்டையும் நிறைவேற்றியதுடன் பைலா திருத்தங்கள் போன்ற சங்க நடைமுறைகளுக்கான தீர்மானங்களையும் நிறைவேற்றியது.

தலைசிறந்த கூட்டுறவாளரான திரு டி. எ. ராமலிங்கம் செட்டியாரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேறியது.

நெசவாளர்களின் பஞ்ச நிவாரண திட்டத்தை ஏற்று நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் சங்க நூலை சாயம் போடுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட சாயச்சாலையாளர்களிடமிருந்து ரூபாய் 500 டிபாசிட்டாகப் பெறுவதென்றும் மகாசபை முடிவு செய்தது

1950—51-ம் ஆண்டு நிர்வாகத்தில் தலைவராக இருந்த ஸ்ரீ பூவசாமிக் கவுண்டருக்கு ரொக்க சன்மானம் கொடுப்பதெனவும் மகாசபை தீர்மானித்தது.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த
5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும்,
வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

ஈரோடு சுதேசி ஜவுளி வியாபாரிகள் சங்கத் தீர்மானம்

மேற்படி சங்கத்தின் கூட்டம் 22—4—52 தேதியன்று நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"ஏராளமான கைத்தறி ஜவுளி இருப்புகள் விற்பனையாகாது தேங்கிவிட்டன. விலைகள் பாதியாக வீழ்ந்துவிட்டன. கைத்தறி ஜவுளி வர்த்தகத்தையே நம்பி வாழும் வியாபாரிகள், ஏழை நெசவாளர்கள், தலால் செய்பவர்கள், பல்வேறு கட்டங்களிலும் தொழிலில் இணைந்து செயல்படும் தொழிலாளர்கள்—மொத்தத்தில் கைத்தறி ஜவுளித் தொழில், வர்த்தகம் ஆகியவற்றின்மீது நம்பிக்கை வைத்து வாழ்க்கை நடத்தும் எல்லாப் பகுதி மக்களும் துன்பத்திலாழ்ந்துள்ளார்கள்.

எனவே, கைத்தறி ஜவுளி வர்த்தகத்திற்கு சர்க்கார் தங்குதடையற்ற ஆதரவும், ஊக்கமும் தரவேண்டுமென்றும், கீழ்வரும் மாற்றங்களை கைத்தறி ஜவுளி வர்த்தகத்துறையில் அமுல் நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள கூட்டம் தீர்மானிக்கிறது."

1. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி விஷயத்தில் கைத்தறி ஜவுளிக்குள்ள எல்லாவிதத் தடைகளையும், விதிகளையும் நீக்குதல்

2. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கைத்தறி ஜவுளிகளின் மீது விதிக்கப்படும் எல்லா ஏற்றுமதி வரிகளையும் நீக்குதல்

3. கைத்தறி ஜவுளிக்கு விற்பனை வரியையும், லைசென்சு முறையையும் ரத்து செய்தல்

4. வெளிநாடுகளுக்கு நூல் ஏற்றுமதி செய்வதைத் தடுத்து, கைத்தறி ஜவுளிகளின் ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்

5. ஏற்றுமதி ஒப்பந்தங்களில் சரக்குகள் பற்றிக் குறிப்பிடுகையில் எல்லாம் ஜவுளிகள் என்றே பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. இது மில் ஜவுளிகள் என்று அர்த்தப்படுத்திக்கொள்கிறது. எனவே, இனிமேல் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களில் பாதியை மில் ஜவுளியாகவும், பாதியை கைத்தறி ஜவுளியாகவும் பதிவு செய்யவேண்டும்.

இத்தீர்மானத்தின் நகல்கள் சம்பந்தப்பட்ட எல்லா டெக்ஸ்டைல் அதிகாரிகள், புதுடெல்லி வர்த்தக, தொழில் இலாகா மந்திரி காரியாலயம், கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டர், சேம்பர் ஆப் காமர்ஸ், அபிவிருத்தி இலாகா காரியதரிசி, தொழில் மந்திரியின் சொந்தக் காரியதரிசி முதலியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

P. கிருஷ்ணசாமி
24/451, கருப்ப கவுண்டர் வீதி,
(க்ஷத்திரியாள் சந்து)
கோயமுத்தூர்.

சமய சஞ்சீவி தைலம்.

பட்சவாதம், இளம்பிள்ளை வாதம் ஆகிய வாதம் 80-க்கும், நரம்புசுளுக்கு, எலும்பு முறிவுகளுக்கும் ஆராத ரணம், புண், புரை, ஊரல், கை கால்களில் நீர்தங்கி மோதுகட்டி சதா துன்பந்தரும் வீக்கங்களுக்கும், மூலமுளை, பௌந்திரம், கண்டாமாலை, கன்னப்புத்து, ராஜபிளவை, காதில் சீழ் வடிதல் ஆகியவைகளுக்கு ஆபரேஷனின்றி பூரணமாகக் குணப்படுத்தும் ஓர் அரிய சஞ்சீவி.

மாடு, குதிரை முதலிய பிராணிகளின் நரம்புச் சுளுக்கு, எலும்பு முறிவு, கால்களில் நீர்தங்கி மோதுகட்டல், வாய்ப்புண். கழுத்துப்புண் கட்டிகள் சொஸ்தமாகும்.

முகப்பரு, வேனல் கட்டிகள் சூரியனைக்கண்ட பனிபோல் எமது சமய சஞ்சீவித் தைலத்தால் பூரண குணத்தை அளிக்கும்.

தங்குவதற்கு இடவசதி உண்டு. ஏழைகளுக்கு தரும வைத்தியம் உண்டு

ஜுபிடர்

தயாரிப்பு

மே 1௨ முதல்

ராணி

சென்னை

பாரகன்

ஸ்ரீ கிருஷ்ணா

&

சயானி

மதுரை	சிந்தாமணி
கோயமுத்தூர்	கர்னாடிக்.
திருச்சிராப்பள்ளி	ராஜரீ.
சேலம்	ஓரியண்டல்
தஞ்சாவூர்	நியூ டவர்.
திருநெல்வேலி	ராயல்
கும்பகோணம்	ராஜா
வேலூர்	தாஜ்.
மாயவரம்	சுந்தரம்
திண்டுக்கல்	என்.வி.ஜி.பி.
காஞ்சீபுரம்	ராஜா.
பாண்டிச்சேரி	ரத்னா.
திருப்பாபுலியூர்	பாடலி
தூத்துக்குடி	ஜோஸப்
விருதுநகர்	சென்ட்ரல்
திருவனந்தபுரம்	நியூ தியேட்டர்
பாலக்காடு	நியூ தியேட்டர்.
நாகர் கோயில்	பயனீர்
ஆலப்புழை	சீமாட்டி
கோட்டயம்	ஸ்டார்.
கொல்லம்	லக்ஷ்மி.
எர்ணாகுளம்	லக்ஷ்மண்

மே 7௨ முதல்

ஈரோடு	ஸ்ரீ கிருஷ்ணா

மே 9௨ முதல்

பெங்களூர்	சாரதா.
"	ஸ்வஸ்திக்.
"	ரூப் மஹெல்ஸ்
மைசூர்	நியூ அபேரா.
கே ஜி. எப்	கே.
மங்களூர்	நியூ சித்ரா

JUPITER PICTURES CIRCUIT